விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii



E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 16 வெள்ளிக்கிழமை (29.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132


# மரண சான்றிதழ் வழங்குவதா பரணகம குழுவின் நோக்கம்?

## நாட்கள் கடத்தப்படுவதாக உறவுகள் விசனம்

(கிளிநொச்சி)

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நாட்களை கடத்தும் நோக்கிலும் மரணச்சான்றிதழை வழங்கி விடுவதிலுமே அதீத அக்கறை காண்பிப்பதாக கவலையுடன் தெரிவித்த காணாமல் போனோரது உறவினர்கள், நட்டஈட்டையும் மரணச் சான்றிதழையும் மட்டுமா இந்த ஆணைக்குழுவினரால் கண்டறிந்து தரமுடியும் எனவும் விசனத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம்மீது கண்ணீர்ப் புகை!


(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை மூடுமாறு கோரி மருத்துவ பீட மாணவ செயற்பாட்டு குழு ஆரம்பித்த ஆர்ப்பாட்ட பேரணி மீது நேற்று பிற்பகல் தண்ணீர் மற்றும் கண்ணீர் புகை பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தியவர்களை கலைக்கும் நோக்கிலேயே

24ஆம் பக்கம் பார்க்க....

## யோஷித நேற்று நீதிமன்றில் ஆஜர்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ நேற்று கடுவல நீத

24ஆம் பக்கம் பார்க்க....

## இரு மீனவர்கள் மாயம்

(முல்லைத்தீவு)

ஒரேபடகில் நேற்று முன்னதினம் அதிகாலை கடற்றொழிலுக்கு சென்ற இரு மீனவர்கள் நேற்று இரவு வரை கரை திரும்பாததால் மீனவ கிராமமே சோகமயமாகி உள்ளது.

இச் சம்பவம் முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் திருகோணமலையைச் சொந்த இடமாகவும் முல்லைத்தீவு பள்ளப்பாடு பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட உலகநாதன் குமரேசன் (வயது 23), மோகனதாஸ் சயந்தன் (வயது 24) என்ற இருவருமே காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன மீனவர்களை தேடி நேற்று முன்தினமும் நேற்றும் அப்

24ஆம் பக்கம் பார்க்க....

## கைதாகும் முன்னாள் போராளிகளை நீதிமன்றில் ஆஜராக்காதது ஏன்?

### காணாமல்போனோரை கண்டறியும் குழு கேள்வி

(கொழும்பு)

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்படும் நபர்கள் எதற்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதில்லை என காணாமல் போனவர்களை தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளஇர் சுந்தரம் மகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு

23ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றில் வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.45 மணி

24ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க் கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

(கொழும்பு)

நாட்டின் இறையாண்மையையும் தேசிய பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கிறார் என்ற குற்றச்சாட்டில் எதிர்க் கட்சி தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்கு கூட்டு எதிர்க்கட்சி திட்டமிட்டுள்ளது.

இது குறித்து கூட்டு எதிர்க்கட்சியின் செயற்பாட்டாளர் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கூறுகையில்,

தலைநகர் கொழும்பில் பெரும்பான்மையாக உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒரு போதும் சுய நிர்ணய உரிமையை கோரவில்லை.

சர்வதேசத்திற்கு புலம்பெயர்ந்துள்ள விடுதலை புலி ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இன்று தமது இலக்கை அடைவதற்கான வானவில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பல நிறங்களில் பல வடிவங்களில் தமிழீழத்தை அடைவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வட மாகாண சபையில் சுயாட்சிக்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி மலையக மக்களுக்கென தனியலகு வழங்குவதற்

24ஆம் பக்கம் பார்க்க....

## சிவகரன் கைது செய்யப்பட காரணம் முகநூலில் புலித் தொடர்பு!

### கடும் நிபந்தனைகளுடன் நேற்று விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட இளைஞர் அணித்தலைவரும், புதியவன் பத்திரிகை ஆசிரியருமான எஸ்.சிவகரன் முகநூலின் (பேஸ்புக்) ஊடாக வெளி நாடுகளில் உள்ள புலிகளோடு தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்திலேயே பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக காரணம் கூறப்பட்ட நிலையில் அவருக்கு நேற்று கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்

24ஆம் பக்கம் பார்க்க....

## 705 பேரினது சாட்சியம் பதிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு வின் அமர்வுகள் கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி இறுதி நாளாக நேற்றுவரை நடைபெற்றது.

24ஆம் பக்கம் பார்க்க....

## புகைப்பட சர்ச்சையில் மகிந்த!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தாய்லாந்து பயணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றிலிருந்து பாரிய உண்மை வெளியாகியுள்ளதாக குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேறறு இடம்பெற்ற

24ஆம் பக்கம் பார்க்க....



## ஒழுக்காற்று நடவடிக்கை முதலில் ஜனாதிபதி மீதே எடுக்க வேண்டும்

### ஐ.தே.கவுடன் இணைந்தவர் அவரே – நிசாந்த எம்.பி

(கொழும்பு)

எங்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாது, அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமானால்முதலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதே எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும், அதிலும் முக்கியமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி தனுஷா சுகுமார் (தனா ரீச்சர்)

(குடும்ப நல சேவை உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை)

(Dip.in BASIC MIDWIFERY)



கடந்த 04.03.2016 அன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட **செல்வி தனுஷா சுகுமார்** அவர்களைப் பாராட்டுவதுடன் இன்று 30ஆவது பிறந்தநாளைக் காணும் அவர் பல்லாண்டு காலம் நீடூழிவாழ இறைவனைப் பிரார்த்திப்பதுடன். அவர் இன்னும் பல உயர்பட்டங்களைப் பெற்று பொதுநல சேவைகளிலும் ஈடுபட வாழ்த்துகின்றோம்.

(4337)

வாழ்த்துவோர்: செல்வன் மதுசங்கர்
செல்வி மதுராங்கி, செல்வன் மேதவன் — மீசாலை

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் ஞானானந்தம்



இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ஞானானந்தம் 28.04.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், கலையரசி (லண்டன்), ஞானகரன் (உரிமையாளர் கவீசா மல்ரிமாட்-இணுவில்), ஞானசொரூபன் ( ஆசிரியர்-மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்), ஞானலோசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தகுமார் (லண்டன்), வாசுகி, அமிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கத்சன், கஜித்தன், நிலாவாணி, ஞானகவீசன், கரநிதா, ஞானஜினோஷன், ஞானகுகர்ஷன் ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் சறோயினிதேவி, காலஞ்சென்ற ஆயிலியம் மற்றும் ஜெயமணி, சச்சிதானந்தம், அன்னலட்சுமி, சதானந்தம், அருளானந்தம் (கனடா), புஸ்பராணி (கனடா), செல்வராணி (ஆசிரியை-யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசையாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2016 இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகாமி அம்மன் கோவிலடி,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

(4335)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

விற்பனைக்கு
பம்பாய்
வெங்காய நாற்று
தொடர்புக்கு :-
அராலி தெற்கு
077 360 5049
(4327)

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(சி-4454)

SANDEV
INCENSE STICKS
சந்தேவ்
Jasmine
Sandev
சந்தேவ்
Incense Sticks
தெய்வீக மணம் கமழும் திருப்தியான ஐந்து வாசனைகளில் இல்லங்களில் கோவில்களில் பாவனைக்கு தெரிவு செய்யுங்கள். மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். யாழ் நகரில் முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
விபரங்களுக்கு
தொலைத் தொடர்பகம்.
303, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்
(C-4455)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் பாலசுந்தரம்



யாழ்.கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாலசுந்தரம் அவர்கள் 26.04.2016 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தப்பு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தப்பு தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன் (கண்ணன்-ஜேர்மனி), மனோகரன் (காந்தன்-ஜேர்மனி), அகிலன் (சுதன்-இங்கிலாந்து), தனஞ்செயன் (குமணன்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரணிகா, சுவஸ்திகா (சோபா), பிரேமிளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சரஸ்வதி, கணேசராசா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனோஜன், ஆரணி, சிவாகினி, அனீஷ், டிக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2016 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சோனப்பு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வீட்டு முகவரி**
**சேர்மன் வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்.**


தொடர்புகளுக்கு:-பாலசுந்தரம் (கணவர்) (இலங்கை 0773538119, 0777180909)
அகிலன் (சுதன்) (பிரித்தானியா) +447751601171
கண்ணன் (ஜேர்மனி) +491705270217
காந்தன் (ஜேர்மனி) +4915202104787
குமணன் (பிரான்ஸ்) +337510383073

(4334)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# யுத்தத்திற்கு வழிகோலுகிறது வடக்கு - தெற்கு இனவாதம்

## ஜே.வி.பியின் செயலாளர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**வடமாகாண முதலமைச்சர் சிவி.விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள யோசனைக்கு அமைவாகவும், தெற்கில் மகிந்த தலைமையிலான குழுவும், இனவாதத்தை தூண்டி நாட்டில் மீண்டும் யுத்தத்திற்கு வழிகோலுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கை தனிமைப்படுத்தும் யோசனையில், அங்குள்ள மக்களின் எந்த தேவைகளும் பூர்த்தியாக்கப்படப் போவதில்லை. இது நாட்டின் ஒற்றுமையை சிதைக்கும் வகையிலேயே அமையும்.

எனவே வடக்கு - கிழக்கு இனவாதத்தை நிறுத்த வேண்டும் என இவர் தெரிவித்தார்.

யுத்தத்திற்கு பிறகு மக்களின் வீட்டு வசதி, மீள்குடியேற்றம், அபிவிருத்தி வேலைகள் இவை எதுவும் மக்களுக்கு செய்து கொடுக்காது, மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை முறையாக செயற்படுத்தாமல் இருப்பதாக மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டினை மறைப்பதற்காக, வடமாகாண அரசியல் வாதிகள் இனவாதத்தை கையில் எடுத்து மக்களை திசை திருப்புவதாக ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் மத்தியில் இனவாதம் தொடர்பில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை, பொருளாதார ரீதியில் தங்களின் அபிவிருத்தியையே விரும்புகின்றனர்.

•சில அரசியல்வாதிகளே இனவாதத்தை தூண்டுவ தாக அவர் தெரிவித்தார். (இ)

## ஒரே கட்சி இரண்டு மேதினக் கூட்டங்களை நடத்துவதில் எந்த பிழையுமில்லை- மகிந்த

ஒரே கட்சி இரண்டு மேதினக் கூட்டங்களை நடத்துவதில் எந்தப் பிழையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்வரும் மே தினமன்று இரண்டு கூட்டங்களை நடத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நான் நினைக்கின்றேன் மே தினமன்று இரண்டு மே தினக் கூட்டங்கள் நடத்தப்படும் என்று. இது வழமையானது ஒன்றே.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் ஏனையவர்களும் இணைந்து கொள்வார்கள். அதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது.

நான் ஆறுமுகன் தொண்டமானின் மே தினக் கூட்டங்களில் பங்கேற்றிருக்கின்றேன்.



மொனராகலை உள்ளிட்ட பல பிரதேசங்களில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களில் பங்கேற்றிருக்கின்றேன்.

இது ஓர் புதிய விடயமல்ல என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விபத்தில் சிக்கிய இருவர் மரணம்

(கொழும்பு)

சம்மாந்துறை, மல்வத்தைப் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவு வீதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆற்று மணல் ஏற்றிச்சென்று கொண்டிருந்த லொறியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை மோட்டார் சைக்கிளை மோதிய லொறியின் சாரதி, தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் எனவும் இந்த விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## சஜின்-வீரவன்ச இடையே மோதல்





முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவிற்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கும் இடையே சில விடயங்கள் தொடர்பில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

விமல் வீரவன்ச ஆதரவாளர்களை இணைத்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதினகூட்டத்தை நடத்த முயற்சி செய்வதாக சஜின் வாஸ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதின கூட்டத்தில் கலந்து கொள்வது தன்னுடையகடமை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன கூறியுள்ளார்.

இதற்காக விமல் வீரவன்சவிடம் அனுமதி கேட்கத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்.

எனவே இந் நிலை முன்னோக்கிச் செல்ல மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவு அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனநாயகத்தால் மட்டுமே கட்சித் தலைவர்களை மாற்ற இயலும் என்று அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு வலுவான ஆதரவாளராவார் என்று சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் தமது எதிர்காலம் குறித்தே கவனம் செலுத்துகின்றனர் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் குறித்து கவனம்செலுத்துவதில்லை எனவும் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். (இ)

## ஆசிரிய உதவியாளர்களின் சம்பளம் 10,000 ரூபாவினால் உயர்த்தப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரிய உதவியாளர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் உயர்த்தப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு ஆசிரிய உதவியாளர்களுக்கும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்

மலையகத்தைச் சேர்ந்த 400 ஆசிரிய உதவியாளர்களுக்கு அண்மையில் நியமனக் கடிதங்களை வழங்கிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய உதவியாளர்களுக்கு சம்பளம் அதிகரிப்பது குறித்த அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் இது குறித்த அமைச்சரவை பத்திரம் சமர்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறுக்கொள்ளப்பட்டு, சம்பளம் உயர்த்தப்பட உள்ளதாக கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## எம்பிலிபிட்டிய கொலை விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம்

(கொழும்பு)

விருந்துபசார நிகழ்வொன்றின் போது பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும்மோதல் சம்பவத்தின் போது, ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான விசாரணை அறிக்கை, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில், பொலிஸ் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையிலேயே, அந்த அறிக்கை, பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

“அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பொலிஸ்மா அதிபரினால் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்த மரணம் தொடர்பில், பொலிஸ் அதிகாரிகள் மூவரடங்கிய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது என மேற்படி பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாசகுரே தெரிவித்துள்ளார். (இ)

## ஜனாதிபதி இணக்கம் கீதா விரைவில் நீக்கம்

(கொழும்பு)



பெந்தர எல்பிட்டிய தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்ஹ வெகு விரைவில் நீக்கப்படவுள்ளார்.

இப்பிரதேசத்துக்கு புதிய அமைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளார்.

கீதா, மகிந்த அணியை தொடர்ந்தும் ஆதரித்து வருவதோடு, பஷில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் கிருலப்பனை மே தினக் கூட்டத்திற்கு பகிரங்கமாக அழைப்பு விடுத்திருப்பதே இதற்கு காரணமாகும். (இ)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை-யாழ்ரன் கல்லூரி-காரைநகர்/ வைத்தீஸ்வரா கல்லூரி-யாழ்ப்பாணம்)

திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி 27.04.2016 அன்று இறைபதம் எய்தினார். அன்னார் காரைநகர் பொன்னம்பலம் வீதியை பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பரமசாமி (சாமியார்-சோதிடர்/ வைத்தியர்), அன்னமுத்து (ஆசிரியர்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான பொன்னுச்சாமி மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், அமரர் ஜெயசோதி (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பவானி (பிரான்ஸ்), Dr.ஜெயலன் ஆகியோரின் அன்பு தாயாரும், Dr.சந்திரமாலா அவர்களின் மாமியாரும், நவீனா (பிரான்ஸ்), சிந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அம்மம்மாவும், யுகன்யா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), கல்கிஜன் ஆகியோரின் அப்பம்மாவும்,

பஞ்சாட்சரம் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), பத்மநாதன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), சிவகங்கை, அமரர் பரவிரதாதேவி, கனகேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், அமரர் ஈஸ்வரபாதம் (வல்வெட்டித்துறை), அமரர் பரஞ்சோதி, தம்பிப்பிள்ளை (Rtd. CTB) வனதேவா (அவுஸ்திரேலியா), Dr.இராஜரட்ணம் (வவுனிக்குளம்), கலைவாணி (அவுஸ்திரேலியா), கணேஸ்வரி (அவுஸ்திரேலியா), சுசிலா (வவுனிக்குளம்), அமரர் மனோன்மணி, புனிதா (பருத்தித்துறை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிவந்தி (அவுஸ்திரேலியா), நிசாந்தி (அவுஸ்திரேலியா), சபேசன் (அவுஸ்திரேலியா), செல்வபாலன், தவச்செல்வன், தமிழ்ச்செல்வி, தமிழினி, சபேசன், மோகன், தயாழினி (பிரான்ஸ்), காந்திமாலா, பிருந்தா (பிரான்ஸ்), சுகந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், அமரர் சுகந்தன், சஜீவன் (அவுஸ்திரேலியா) , சிவராஜி (U.K), சுகந்தினி, சிவரஞ்சி (கொழும்பு பல்கலைக்கழகம்), நிதர்சா (U.K), குமுதா, சதீஸ்குமார், பிரதீப்குமார், முரளிதரன் (இந்தியா) ஆகியோரின் பெரியம்மாவும், தங்கராசா (தங்கப்பழம்-பருத்தித்துறை), தருமலிங்கம், கைலைநாதன் (பிரான்ஸ்), ஞானமலர் ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கலட்டி அம்மன் வீதியிலுள்ள இல்லத்தில் 01.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம் பெற்று 9.30 மணிக்கு காரைநகரிலுள்ள அவரது வீடு ஊடாக இறையுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளை மேற்கொள்வதற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: மகன் Dr.ஜெ.ஜெயலன்

சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
மருத்துவப் பதிவாளர்-யாழ்.நகர் மேற்கு, யாழ்.போதனா வைத்தியசாலை.

(சி-4459)


## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்துக்களும்



யா/செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர்
உயர்திரு. கந்தையா தருமகுலசிங்கம்
(S.L.P.S.I)
இன்று மாலை 4.00 மணிக்கு கல்லூரி பரமேஸ்வரன் அரங்கில் மணிவிழாக் காணும் அதிபர் அவர்களை வாழ்த்துகின்றோம்.

பார்வையிலே எளியனாய் பண்பிலே சிகரமாய்
பார்போற்ற வாழ்ந்த பண்பான அதிபரே
உன்னத கல்விப் பணியில் உயர்ந்தே அதிபரானீர்
செங்குந்த இந்துவிலும் செயற்கரிய பணி செய்தீர்
இல்லறம் நல்லறமாக்கியே இன்புறும் வாழ்வது தொடரவே
இறைவனை வேண்டிய இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி


# மரண சான்றிதழ்...

வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 16ஆவது அமர்வு 4 நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று நேற்றைய தினத்துடன் நிறைவடைந்திருந்தது.

இந்த நிலையில் இதுவரை காலமும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளில் பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கை முற்று முழுதாக குறைவடைந்து வருகின்றமையை அவர்களது சாட்சியமளிப்புக்கள் நிரூபித்துள்ளன.

விசாரணைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றதே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை எனவும் சாட்சியமளித்த உறவுகள் விசனம் தெரிவித்தனர்.

இந்த ஆணைக்குழு ஆரம்பித்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மிகுந்த நம்பிக்கையுடனும் ஆவலுடனும் சென்று தமது சாட்சியங்களை பதிவு செய்தனர். தமது உறவுகள் மீண்டும் கிடைக்கப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு அதிகளவிலேயே மக்களிடம் காணப்பட்டிருந்தது.

ஆனால் மக்கள் தற்போது மிகவும் மனமசோர்ந்த நிலையிலேயே தமது சாட்சியங்களை பதிவு செய்ய செல்கிறார்கள். கடிதம் வந்ததால போகிறோம் என்ற கட்டாயத்தில் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க செல்கிறார்கள்.

ஆணைக்குழு முழு மூச்சாக மரணச் சான்றிதழ் மற்றும் நிவாரணம் வழங்குவதிலேயே ஆவலாக உள்ளது என குற்றம் சாட்டியுள்ள சாட்சியமளித்த மக்கள், இவர்களால் எம் உறவுகளைத் தேடி கண்டறிய முடியாதா எனவும் விரக்தியுடனும் கேள்வி எழுப்பி உள்ளனர்.

அத்துடன் சிலமொழி பெயர்ப்பாளர்கள் துறை சார்ந்த வல்லுனர்களாக இல்லை. உணர்வுகளை சரியாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விசாரணை செய்பவர்களும் இல்லை. ஆணைக்குழுவில் உள்ள அதிகாரிகள் காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்வதாக கூறினாலும் இதுவரை அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதாக தெரியவில்லை எனவும் பாரிய அளவில் குறைகள் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்களைக் கடத்துவதற்காகவே குறித்த அமர்வுகள் நடைபெற்று வருகின்றன என்று சந்தேகிக்கப்படவைக்கின்ற நிலையில் இவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக காணாமல் போன வருடைய தாய் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது எனது மகன் இராணுவத்திடம் சரணடைந்தார். 2013ஆம் ஆண்டு காணாமல் போனவர்களை கண்டறியும் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை பதிவு செய்து உறவுகளை கண்டு பிடிக்க முடியும் எனஅறிவிக்கப்பட்டபோது உடனடியாக எனது மகனின் விபரங்களை ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தேன். அத்துடன் பல்வேறுபட்ட அமைப்புக்களிலும் பதிவுகளைமேற் கொண்டிருந்தேன். ஆனால் முதற்கட்டமாக இம்முறைதான் என்னை விசாரணைக்காக அழைத்துள்ளார்கள்.

ஆனால் 2010ஆம் ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டுவரை என்னை பலர் விசாரணை செய்து கொண்டே. இருந்தார்கள் அந்த வகையில் எனது மகன் உயிருடன் உள்ளார் என்பது உறுதி.

இருக்கிறார்களா? இல்லயா? என்ற உரிய பதிலை எமக்குதர வேண்டும். அதன் பின்னாதான் மரணசான்றிதழ் நஷ்ட ஈடுபற்றிபேச வேண்டும். ஆனால் அவர்கள் வெந்தபுண்ணில் வேலைபாய்ச்சுவது போல் ஆரம்பத்திலேயே தேடவேண்டுமா? எனக் கேட்கிறார்கள். எம்மால் சாட்சிசொல்ல முடியவில்லை.

தற்போதும் பரவலாக காரணம் தெரியாமல் கைதுகள் நடைபெறுகின்றன. இவ்வாறு சாட்சி சொல்லும் நாங்களும் இனிவரும் காலத்தில் கைது செய்யப்படலாம். ஆனால் எமது உறவுகள் கிடைக்கும் வரை நாங்கள் தேடிக்கொண்டே இருப்போம்.

மனநிலை பாதிக்கப்பட்டு தெரு நாய்கள் போல அலைந்து திரிகிறோம். காலக்கெடு முடிந்த பின்னரும் எம் உறவுகளை தேடிதருவதாக வந்துள்ளார்கள் அதை புறக்கணிக்க கூடாது என்பதற்காக சாட்சியம் அளிக்கவருகிறோம்.

இந்த ஆணைக்குழு மீண்டும் எம்மை ஏமாற்றும் செயலை செய்ய மாட்டார்கள் என்று எமக்கு நம்பிக்கைவரும் வகையில் காணாமல் போனஒருவரையாவது கண்டு பிடித்து கொடுக்க வேண்டும். இல்லை என்றால் இத்தோடே இவர்களின் ஏமாறறு வேலையை நிறுத்திக் கொள்ளவேண்டும் என தெரிவித்தார். (செ-9)


## அறிவித்தல்

சுஜீவா வைத்தியசாலை
மறு அறிவித்தல் வரை திறக்கப்பட மாட்டாது
- DR.ஜெ.ஜெயலன்
(C-4459)


# இன்றைய போட்டிகள்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவாலி சென் பற்றர்ஸ் அணியை எதிர்த்து விண்மீன்ஸ் அணியும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும போட்டியில் பொற்பதி சென் பீற்றஸ் அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (க)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

### திரு.மாரிமுத்து நவநீதமணி

( BA.Dip in Ed, MED, SLPS- I )



எமது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர்
திரு. மா.நவநீதமணி
அவர்கள் 25.04.2016 அன்று வடமராட்சி வலய பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுச் சென்றதையிட்டு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்

பரு.உதைபந்தாட்ட சங்க லீக், செயற்குழு உறுப்பினர்கள் கழகங்கள்
பரு.உதைபந்தாட்ட சங்க மத்தியஸ்த சபை.
(C-4457)

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2016

நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் சபைநிதி - 2016 அபிவிருத்தி ஒதுக்க நிதிகளிலிருந்து கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1.கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 03.05.2016 ம் திகதிதொடக்கம் 16.05.2016 திகதிபிப 3.00 மணிவரை

2.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 17.05.2016ம் திகதி 12.00 மணிவரை

3.கேள்வி திறக்கப்படும் திகதி 17.05.2016 பி.ப 2.00 மணி (கேள்வி திறக்கப்படும் சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)

4.கேள்வி ஆவணங்கள் பெற தகுதியுடையவராகுவதற்கு சித்திபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (BLACK LIST) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் "இக்ராட்" (ICTAD) பதிவையுடையவராகவும் இருத்தல் வேணடும். (கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது வலுவுள்ள (ICTAD) புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.)

5.கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்குமுத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை "செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ, அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புவதுடன் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

6.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்குஅதிகாரமுண்டு.

7.மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT உட்பட) | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | சாஸ்திரியார் வீதி புனரமைப்பு (தார்) | 1.429Mn | 03 மாதங்கள் | 7200.00 | 1170.00 | C9 |
| 02 | தங்காலை வீதி புனரமைப்பு (தார்) | 0.489Mn | 03 மாதங்கள் | 2400.00 | 1170.00 | C 10 |
| 03 | பெருவெட்டி வீதி புனரமைப்பு (தார்) | 0.786 Mn | 03 மாதங்கள் | 4000.00 | 1170.00 | C 10 |
| 04 | லூத்துமாதா கோயில் வீதி புனரமைப்பு (தார்) | 0.634 Mn | 03 மாதங்கள் | 3200.00 | 1170.00 | C 10 |
| 05 | கிழுவப்பை வீதி புனரமைப்பு (கொங்கிறீட்) | 2.099 Mn | 05 மாதங்கள் | 10500.00 | 1170.00 | C 8 |
| 06 | பூதவராயர் வீதி புனரமைப்பு (மிகுதி வேலை கொங்கிறீட்) | 0.658 Mn | 04 மாதங்கள் | 3300.00 | 1170.00 | C 10 |
| 07 | சபை வீதிகளிற்கு குறுக்காக வெட்டி குடிநீர் குழாய் பொருத்திய இடங்களை சீர் செய்தல். | 0.151 Mn | 02 மாதங்கள் | 750.00 | 1170.00 | C 10 |
| 08 | வேதவனம் வீதி புனரமைப்பு (கொங்கிறீட்) | 1.147 Mn | 05 மாதங்கள் | 5750.00 | 1170.00 | C 9 |
| 09 | முருகன் கோயில் வீதி புனரமைப்பு (கொங்கிறீட்) | 3.573 Mn | 05 மாதங்கள் | 18000.00 | 1170.00 | C 8 |
| 10 | பிரதானவீதி 2 ஆம் ஒழுங்கை. கழிவு வாய்க்கால் புனரமைப்பு (கொங்கிறீட்) | 1.611 Mn | 05 மாதங்கள் | 8000.00 | 1170.00 | C 9 |
| 11 | ஆம்புலியோடைவீதி புனரமைப்பு (தார்) | 1.745 Mn | 04 மாதங்கள் | 8750.00 | 1170.00 | C 9 |

புவனேந்திரன் ரமேஸ்வரன்
செயலாளர்,
நகரசபை,
பருத்தித்துறை.

(ஐ-4453)

## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# வித்தகம்



இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
காலம்: 30.04.2016 சனிக்கிழமை
நேரம்: மாலை 5.30 மணி

### நிகழ்வின் நிரல்

**மங்கல விளக்கேற்றல்**
எந்திரி சி.தயாபரன் தம்பதியினர்

**கடவுள் வாழ்த்து**
திரு.சு.ஶ்ரீவரன் அவர்கள்

**தலைமையுரை**
பேராசிரியர் பொன். பாலசுந்தரம் அவர்கள்
(வாழ்நாள் பேராசிரியர், முன்னை நாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

### "விவாத அரங்கு"

**நடுவர்கள்**
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்

**பொருள்:**
இன்றைய சூழ்நிலையில் நம் மக்களை
பெரிதும் நெறி செய்ய வல்லவர்கள் இ

01. அரசியல் வாதிகளே! திரு. இரா.செல்வவடிவேல் அவர்கள்
02. சமயவாதிகளே! திரு.ந.விஜயசுந்தரம் அவர்கள்
03. இலக்கிய வாதிகளே! கலாநிதி ஶ்ரீ.பிரசாந்தன் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
"கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

**அகில இலங்கை கம்பன் கழகத்தினர்**
தொடர்புகளுக்கு:- 077 293 5509

## தமிழாய் வாழ்வோம்
## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்
## பொதுக்கூட்டம்

காலம்:- 08.05.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

இடம்:- யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை மண்டபம், கல்லூரி வீதி, நீராவியடி.

புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெற இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

இரா. செல்வவடிவேல்,
பொதுச் செயலாளர்,
தமிழ்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(4322)

# இராசி பலன்

29.04.2016
(சித்திரை 16, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சப்தமி பிற்பகல் 5.07 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 5.58மணிவரை
சுபநேரம்5.58-7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக் புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை,புனர்பூசம் | | |
| சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** அதிர்ஷ்டகரமான நாள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வழிபாட்டால் ஆனந்த மடைவீர்கள்.

**மேடம்:** பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், பெருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகமான நாள்

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும்,நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய திட்டங்கள் வெற்றி தரும்.

**மிதுனம்:** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பேச்சில் நிதானம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், உடல் நலம் சீராக சிறு செலவுகள் செய்ய நேரிடலாம், இடமாற்றம் பற்றிய சிந்தனைகள் மனதில் தோன்றும்.

**கடகம்:** உங்கள் கருத்துக்களைப் பலரும் கேட்டு நடக்க முன்வருவர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறை த்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்,ஆன்மீக சிந்தனைகள் மேலோங்கும் நாள்

**தனுசு:** மனதில் இருந்த பாரம் குறையும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பாராட்டும்,புகழும் கூடும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, மனதில் தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** தாய் வழி ஆதரவு பெருகும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்,விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



# நாட்டை ஆள்வது ராஜபக்ஷாக்களா?

## மக்கள் சந்தேகம்; தொடர் கைது நடவடிக்கைகளுக்கு வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**முன்னாள் போராளிகள் மீண்டும் சிறைபிடிக்கப்படல் போன்ற சம்ப வங்கள், மீண்டும் இலங்கையை ராஜபக்ஷாக்கள் ஆள்கிறார்களா எனும சநதேகத்தை தமிழ் மக்கள் மத்தியில் விதைத்து இருக்கிறது என சுட்டிக் காட்டியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் பாலச் சந்திரன் கஜதீபன் தொடர் கைது நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

புனர்வாழ்வளிக்கப்பட்டு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லாதவர்கள் என சான்றிதழ் வழங்கி, விடுவிக்கப்பட்டவர்களை இலக்கு வைத்து அண்மைக்காலமாக விசாரணை என்ற பெயரில் அழைக்கப் பட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியன் இளைஞரணிக்குப் பொறுப்பாக இருந்தவரான வி.எஸ்.சிவகரன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இலங்கை நாடு ஒரே நாடாக இருக்க வேண்டும் என்றும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றுக்கு தமிழர் தரப்பு தயாராகவே இருக்கக் கூடிய இந்தநேரத்தில், இலங்கையின் ஆட்சியையே மாற்றிய மைத்தோம் என்ற உரிமையோடு எமக்கானதை எப்படியும் பெற்று விடலாம் என்கின்ற நம்பிக்கையோடு எமது தலைவர்கள் உண்மையான விசுவாசத்தோடு செயற் பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை தனது இயலுமைகளுக்கும் அப்பால் சென்றும், அதிகபட்சமான சகிப்புத் தன்மைகளோடும் இந்த சூழ்நிலையைக் குழப்பி விடாமல் தக்க வைகக வேண்டுமென்று போராடி வருகிறது.

எமது நீடித்த நிலைத்த தீர்வுக்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமை நம்பிக்கையோடு தான் போராடி வருகிறது. அப்படியிருக்க எமது இளைஞர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படும் புதிய நிலைமையும், என்ன காரணத்துக்காக கைது செய்யப்படுகிறார்கள்? என்பதைக்கூட கூறாமல் கைது செய்யும் நடைமுறையும் தமிழ்மக்கள் மத்தியில் பலத்த கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது.

2009 களுக்குப்பின் இருந்த முன்னைய ஆட்சியில் தமிழ்மக்கள் ஒன்று திரண்டு தமக்கான உரிமைகளைக்கேட்பதற்குக்கூட அஞ்சினார்கள். அப்படிக்கேட்டால் எங்கே கொலை செய்யப்பட்டு விடுவோமோ? அல்லது காணாமல் ஆக்கப்பட்டு விடுவோமோ என்பதான காரணம் தான் அவர்களின் அச்சத்தின் அடிப்படையாக இருந்தது.

ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின்னர் மக்கள் மெல்ல மெல்ல சிறிதளவாக எனினும் ஜனநாயகச் சூழலுக்குக்குள் நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை மறுப்பதற்கு இல்லை. எனினும் இது முழுமையான ஜனநாயகம் இல்லை என்பதையும் அனைவரும் ஏற்பார்கள். அப்படியாகக் கிடைத்த இடைவெளிக்குள் மக்கள் தமது அடிப்படை உரிமைகள் சார்ந்த பல விடயங்களுக்காக தாமாகவே ஒன்று திரளவும், குரல்கொடுக்கவும், போராடவும் முன்வந்தனர். குறிப்பாக இளைய தலைமுறையினர் கூட இன்றைக்கு ஜனநாயக அடிப்படையிலான தமது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பல இளைஞர்கள் அரசியல் கட்சிக ளிலே தம்மைப்பதிவு செய்து வரு கின்றமையையும் காண்கிறோம். இது சிறப்பான ஒரு முன்னேற் றமாக பார்க்கப்படுகிறது. இப்படி யான ஒரு சந்தர்ப்பத்தில் தான் முன்னாள் போராளிகளின் கைது, அதைப் போல தமிழரசுக்கட்சியின் இளைஞர் அமைப்புக்கு பொறுப் பாக இருந்த சிவகரனின் கைது என்பன இடம்பெற்று வருகின்றன.

சிவகரனின் கைது மூலமாக இது நாளைக்கு ஏனைய இளைஞர்களுக்கும் நடக்கலாம் எனும் எச்சரிக்கையை விடுவதற்கு இந்த அரசாங்கம் விரும்புகிறதா? இளைஞர்களின் அரசியல் மீதான நாட்டத்தை ஆரம்பத்திலேயே அடக்கி விட வேணுமென்று இந்த அரசு கருதுகிறதா? என்பதான கேள்விகளை இது சுமந்து நிற்கிறது.

கைதுகளுக்கான காரணத்தை இந்த அரசு வெளியிட தயாராக இருக்கிறதா? எனும் கேள்வியும் தமிழ் சமூகத்தால் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது என அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-89)

## சமஸ்கிருத வகுப்புக்கள் யாழில் நடத்தப்படும்

உலகின் தொன்மைமிக்க மொழிகளில் ஒன்றாக சமஸ் கிருதமொழி விளங்குகின்றது. வேதங்கள், உப நிடதங்கள், புராணங்கள், மகாபாரதம், தோத்திரங்கள், நாட்டிய நூல்கள் எனப்பல நூல்கள் இம் மொழியில் அமைந்துள்ளன.

அத்தகு செழுமை மிகுந்த இம் மொழியினை இன்றைய சமு தாயத்தினரிடையே கற்பிக்க வேண்டும். அது தொடர்பான இலக்கண அறிவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படை யாகக்கொண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்களம் சமஸ்கிருதமொழி வகுப்பினை யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வகுப்பு ஆரம்பம் -மே மாத இறுதி

காலம் - சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை (தொடர்ந்து 3 மாத காலம்)

நேரம் -காலை 9 மணி முதல் நண்பகல் 12மணி வரை

பயிலரங்கு நடைபெறும் இடம்- குருகுலமண்டபம், ஆணைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

இப்பயலரங்கில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர் கள்தமது பெயர் விபரங்களை 011 255 2641 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன், 011 255 2825 தொலைநகல் என்பவற்றின் மூலம் தொட ர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

தபால்மூலம் தொடர்பு கொள்ள விரும்புப்வர்கள் : பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248/1 காலி வீதி, கொழு ம்பு-04 என்னும் முகவரிக்கு கடிதம் அனுப்புவதன் முலம் பதிவு செய்து கொள்ளலாம். தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் “சமஸ்கிருத மொழி வகுப்பு-2016” என இடப்படுதல் வேண்டும்.

இவ்வகுப்புகளிற் பயில் வதற்கு எவ்வித வயது எல்லை யும் கட்டணமும் இல்லை யாத லின் ஆர்வமுள்ளோர் இவ் வகுப்புக்களிற் கலந்து கொண்டுபயன்பெறலாம் எனத்திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ

## பல்கலை. மாணவிகளுக்கு எவ்வித பாதுகாப்புமில்லை

### இனம் தெரியாத நபர்களால் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவிகளுக்கு இரவு நேரங்களில் இனம்தெரியாத நபர்களால் அச்சுறுத்தல் ஏற்படுவதாக மாணவர்கள் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிப்பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள வீடுகளில் தங்கியிருந்து எமது கல்வி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் மாலை வேளைகளில் வீடுகளுக்கு வரும் போதும் இரவில் தங்கி நிற்கும் போதும் பல இனம் தெரியாத நபர்களின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் அச்சத்தில் இருந்தே கல்வி கற்க வேண்டியதாக இருக்கின்றது.

இது தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை எமக்கு விரக்தி அளிக்கின்றது. நாம் வீதிகளில் நடந்து வரும் போது தகாத வார்த்தைகளை உபயோகிப்பதும் இரவு நேரங்களில் நாம் தங்கியிருக்கும் வீடுகளுக்கு கற்கள் வீசுவது, ஜன்னல் ஓரத்தில்நின்றுமறைந்திருந்துஎம்மை கண்காணிப்பது போன்ற தகாத நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இரவில் எமக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அச்சத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டிய நிலை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

எனவே யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இரவு நேரங்களில்பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## காலி மேதினக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி.கலந்து கொள்ளும்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை சக்திமிக்கதாக பலப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்த தோடு கட் சிகள் அனைத்தும் காலியில் நடைபெறும் மேதினக் கூட்டத்திலும் பங்கு கொள்ளுமா றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் ஜனா திபதி தலைமையில் நடைபெ ற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அங்கத்து வக் கட்சிகள் கலந்து கொண்ட விசேட கூட்டத்திலேயே இந் தக் கோரிக்கை ஜனாதிபதியினால் விடுக்கப்பட்டது. அந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தி தமிழ் மக் களின் அரசியல் உரிமைப் பிரச் சினைக்கு கௌரவமான தீர்வொன்றைக் காண்பது அவசியம் என்பதை வலியுறுத்தியதோடு அதற்கு ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப் பிலு ள்ள கட்சிகள் பூரண ஒத்துழை ப்பை வழங்க வேண்டும் என் றும் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் மேதினக் கூட்டத்திற்கான அழைப்பை ஏற்றுக் கொண்டு காலியில் நடைபெறும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கலந்து கொள்ளும் என்று அதன் செயலாளர் தெரிவித்தார்.(இ

# வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் கஷ்டங்களை அனுபவிக்கும் மக்கள்

பல்வேறு போராட்டங்களின் பின்னர் மீள் குடியேற்றப்பட்ட சம்பூர் மக்கள் வாழ்வாதாரம் ஏதுமின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் 360 குடும்பங்களும் அதன் பின்னர் 546 குடும்பங்களுமாக மொத்தம் 906 குடும்பங்கள் சம்பூரில் பத்து ஆண்டுகளின் பின்னர் மீளக்குடியேறின.

இவர்களில் 360 குடும்பங்களில் பெரும்பாலானோருக்கு மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால்பின்னர்குடியேறிய 546 குடும்பங்களுக்கு எந்த விதமான உதவிகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. தற்காலிக கொட்டில்களோ, மலசலகூட வசதிகளோ, குடிநீர் வசதிகளோ இல்லாது மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சுமந்தவர்களாக கொளுத்தும்வெயிலில் வாடி வதங்குகின்றனர். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குழந்தைகளும், முதியவர்களும், ஆண்களும், பெண்களும் சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் சம்பூர் மகாவித்தியாலயம், சம்பூர் ஸ்ரீமுருகன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன ஆரம்பித்து இயங்குகின்றன. சம்பூர் ஸ்ரீமுருகன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கட்டடங்கள் அழிவடைந்த நிலையில் தற்காலிக கொட்டிலில் இயங்குகின்றது.

இங்கு கற்கின்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்கூட இல்லாத நிலையில் மாணவர்களின் கல்வி தொடர்வது வேதனையான விடயம் என பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய நிலையைப் போக்க தனவந்தர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இக்குழந்தைகளின் வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டுமென்றும், உடனடியாக மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என அங்குள்ள மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

# நீத்தார் பெருமை நினைவு ஏந்தல் முதியோர் மாதாந்த ஒன்றுகூடல்

இலங்கை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட அங்கத்தினர், முதியோர், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து நடத்தும் நீத்தார் பெருமை நினைவு ஏந்தல் முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை இணைச்செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேலும் தலைமையுரையை தலைவர் க.கணேசமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் சிறப்பு நிகழ்வாக கழகத்தின் முதியோர் 6 ஆவது பத்திரிகை வெளியீடும் ஆய்வுரையும் இடம்பெறும்.

மேலும் இந்த மண் என்றும் மறக்காத மருத்துவர் என்ற சிறப்புரையை மேலதிக நீதிமன்ற நீதவான் இ.த. விக்னராஜாவும்

மருத்துவ கலாநிதி அமரர் இ.தெய்வேந்திரன் அவர்களின் சமூக நோக்கு எனும் சிறப்பு விரிவுரையை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் வழங்கவுள்ளனர். (இ)

# ஜனாதிபதிக்கு சமூக வலைத்தளத்தில் அச்சுறுத்தல் விடுத்தவர் கைதானார்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, சமூக வலைத்தளத்தில் அச்சுறுத்தல் விடுத்தவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யக்கலவைச் சேர்ந்த இந்த சந்தேக நபர், மலேசியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில், கட்டுநாயக்க விமான நிலையம் திரும்பிய போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில் நுழைவு விசா காலாவதியான நிலையில் இவர் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, குறித்த சந்தேக நபர் கொழும்பு பிரதம நீதவான் முன்பாக ஆஜர படுத்தப்படவுள்ளார். (இ)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் பொலிவுட் நடிகை

(கொழும்பு)



இலங்கையில் பிறந்த பொலிவுட் நடிகையான ஜெக்கியுலின் பெர்னாண்டஸ், இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை மீள அமைத்துக்கொடுக்கும் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக மும்பைய் மிரர் தெரிவித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந்த பணிகளை அவர் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது உதவிகளை செய்துவரும் பெர்னாண்டஸ், இலங்கையில் வீடுகளை அமைக்கும் திட்டம் ஆரம்ப யோசனை மட்டத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

2006 ஆம்ஆண்டு இலங்கையின் சார்பில் உலக அழகியாக தெரிவான பெர்னாண்டஸ் பின்னர் பொலிவுட் திரையுலகுக்கு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 96 ஆவது நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு, ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 96 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இதேவேளை காலை 6 மணியளவில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் நடைபெறும். பிற்பகல் 4.30 மணிக்கு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் மாலை நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், யாழ்ப்பாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார், பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

கனடா ஞானபாஸ்கரோதய சங்க கலாசார ஒன்றிய கல்வியங்காடு சிறுவர்களுக்கான கல்வி சார் ஊக்குவிப்பு நிதியப் பொறுப்பாளர் சி.பரஞ்சோதி, ஜே/259 கிராம சேவகர் சி.சுபாகரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-08

பகுதி-II

## தமிழ்க் கல்விக் கழகம்

## விடைகள்

(28.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | |
|---|---|---|
| 1) | அ) Watering | 32)1 |
| 1.சரீரம்/மெய் | ஆ) Garden | 33) 3 |
| 2.பிரிந்து | 7) Please keep Silent | 34) 3 |
| 3.அ) ஓடுகின்றது | 8) வீட்டுக்குப் போவோம் | 35) 4 |
| ஆ)மெதுவாக | 9) கால் கிலோ என்ன விலை? | 36) 3 |
| 4.போன்ற | 10) 60 ரூபாய் | 37) 1 |
| 5. ஆசை | 11) | 38)6 |
| 6.பஞ்சு போன்ற உடலை | அ)ஊர் | 39) 5 |
| 7.கூடிஆடி | ஆ) மேசை | 40) 3 |
| 8.நான் | 12) 3 | 41) 1 |
| 2) | 13)4 | 42) |
| அ.நாளை வரும்போது, புதிய | 14)2 | 1)நாய் |
| அழிப்பான் ஒன்று கொண்டு | 15) 1 | 2) 6பேர் |
| வரவேண்டு மென்று ஆசிரி | 16) 2 | 3) 44 பேர் |
| யர் கூறினார். | 17) 1 | 4) 31 பேர் |
| ஆ.சத்தியா! அதை உன்னால் | 18) 3 | 5) 75 பேர் |
| செய்ய முடியுமா? | 19) 4 | 6)13பேர் |
| 3) | 20)4 | 43)4055 |
| அ)குழம்பு | 21) 4 | 44)60,170 |
| ஆ)ஓட்டுநர் | 22) 1 | 45)4039,3214 |
| இ)ஒன்றுசேர்தல் | 23) 3 | 46) நீளம்= 27cm |
| ஈ)அடிமை | 24) 2 | அகலம்= 17cm |
| 4) | 25)2 | 47) 00:30 |
| அ)இலங்கை போக்குவரத்து | 26) 1 | 48) Open |
| சபை | 27)1 | 49) இரண்டாயிரம் ரூபா |
| ஆ) பலநோக்கு கூட்டுறவுச் | 28)1 | தாள் |
| சங்கம் | 29) 1 | 50) |
| 5) தசாப்தம் | 30) 3 | 1) 26cm |
| 6) | 31) 3 | 2)10cm$^2$ |


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:36செவ் 12 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BBA/அரசதொழில்
தொ.இ: B/4284

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 19செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/4291

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BE/பொறியியலாளர் இந்தியா
தொ.இ: B/4292

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MSc/ஆசிரியர்
தொ.இ: B/4295

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 27
உயரம்: 5'1"
தகைமை/தொழில்BSc, MSc/பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/5139

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 65செவ் 8 இல்
உயரம்: 158cm
தகைமை/தொழில்: BBA/தனியார் தொழில்
தொ.இ: G/5141

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 53
உயரம்: 169cm
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5143

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 17சூரிசெவ் 2 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5145

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## கிராமிய பொருளாதார அமைச்சுக்கு

# குறுகிய காலத்தினுள் சாதகமான பதில் அனுப்பாத பட்சத்தில் பொருளாதார மத்திய நிலையம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படலாம்

## இணைத் தலைவர்களுக்கு வவு.அரசாங்க அதிபர் கடிதம் மூலம் அறிவிப்பு

(குருமன்காடு)

மிக குறுகிய காலத்தில் சாதகமான காணி பற்றிய பதிலொன்றை கிராமிய பொருளாதார அமைச்சுக்கு அனுப்பாத பட்சத்தில் வவுனியாவில் அமைக்கப்படவுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோகண புஸ்பகுமார மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கான காணி அடையாளப்படுத்துவதில் இழுபறி நிலை ஏற்பட்டு வரும் நிலையிலேயே வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இக் கடிதத்தினை வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஓமந்தை மாணிக்கவளவு காணி நகரில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் 13 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காணியாகும்.

இக் காணி 1966 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான வில்லியம் கோபல்லாவவினால் தனியார் ஒருவருக்கு நன்கொடையாக வழஙகப்பட்டுள்ளது. இக் காணியை மீள் சுவீகரிப்பதற்கு கால அவகாசம்குறுகிய தொன்றல்ல.

அத்துடன் நட்டஈட்டையும் காணி உரிமையாளருக்கு வழங்க வேண்டும்.

சாளம்பைக்குளம் அரச காணி வனவளத்திணைக்களததினால் வீடமைப்புதிட்டத்திற்கென விடுவிக்கப்பட்ட 200 ஏக்கர் காணியில் 3 ஏக்கர் காணியை மேற்படி விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு விடுவிக்கமுடியும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரி வித்திருந்தார். இக் காணியானது நகரத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இக்காணியில் 2 ஏக்கர் காணியானது ஏற்கனவே 4 பயனாளிகளுக்கு அரை ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

பம்பைமடு அரசகாணி வவுனியா நகரத்தில் இருந்து மன்னார் வீதி வழியாக 8 கிலோமீற்றர் தூரத்தில் பம்பைமடுவில் இருந்து செக்கடிப்புலவு செல்லும் வீதிக்கு அடுத்ததாக பிரதான வீதிப்பக்கமாக 5 ஏக்கர் அரச காணி அமைந்துள்ளது.

இக் காணி வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமானது.

இக் காணியை விடுவிப்பதற்கு கால அவகாசம் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈரப்பெரியகுளம் அரச காணியானது நகரத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் ஏ9 வீதியில் முன்பு பொதிகள் சோதனை செய்யும் சாவடிக்கு அண்மித்ததாக சுமார் 15 ஏக்கர் காணி அமைந்துள்ளது.


இக் காணியில் விசேட பொருளாதார அமையம் ஒன்றினை அமைப்பதற்கு 5 ஏக்கர் காணியை விடுவிக்கலாம் என வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட காணிகளில் தாண்டிக்குளம் பண்ணைக் காணியும் ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள 5 ஏக்கர் காணியுமே உடனடியாக விடுவிக்கக்கூடிய நிலையில் உள்ளது.

இந் நிலையில் மிக குறுகிய காலத்தில் சாதகமான காணி பற்றிய பதிலொன்றை கிராமிய பொருளாதார அமைச்சுக்கு அனுப்பாத பட்சத்தில் இவ் விசேட பொருளாதார மையம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளது என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசும் போது இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-3-250)



கிளிநொச்சி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் கிராம மட்டத்தில் சமாதானம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற போது...

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

## கட்டடத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

நல்லாட்சி அரசின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபக் கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி விவேகானந்தா நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல்பணிப்பாளர்அகேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக விவேகானந்தா நகர் கிராம அலுவலர் எம்.சந்திரபாலன் ,முன்னாள் கரைச்சி பிரதேச சபை உப தவிசாளர் வ.நகுலேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-272)

## வைரவப்புளியங்குளத்தில் இளைஞர்கள் அட்டகாசம் விளம்பரப்பலகைகள் அடித்து நொருக்கப்படுகின்றன

(குருமன்காடு)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் மாலை, இரவு வேளைகளில் இளைஞர்கள் அட்டகாசம் செய்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ள நிலையில் தனியார் கல்வி நிலைய விளம்பர பலகைகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. வவுனியா, வைரவபுளியங்குளம் கதிரேசு வீதி மற்றும் வைரவர் கோவில் வீதி என்பன தனியார் கல்வி நிலையங்களைக் கொண்ட பகுதியாகும். மாலை வேளைகளில் இப்பகுதியில் ஒன்று கூடும் இளைஞர்கள், அட்டகாசம் புரிவதுடன் கல்வி நிலையங்களில் கற்கும் மாணவர்களுடனும் அடிக்கடி கைகலப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வைரவ புளியங்குளம், வைரவர் கோவில் வீதி மற்றும் இராசதுரை வீதி என்பவற்றில் உள்ள கல்வி நிலையங்கள் இரண்டினது விளம்பர பலகைகள் மீது அன்றைய தினம் இரவு இளைஞர்கள் தாக்குதல் நடத்தி உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம் தொடர்வதாகவும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக இடையூறுகள்

# நல்லாட்சி அரசாங்கத்துக்கான ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கருத்து

(மல்லாவி)

தொடர்ச்சியாக தமிழ் மக்களிற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுமிடத்து, நல்லாட்சி அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவு தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை த.தே கூட்டமைப்புக்கு உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது தொடரும் கைதுகள் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தினை போன்றதொரு தோற்றப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. அவை தற்போது மக்கள் மத்தியில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இராணுவ முகாமிற்குள் சென்றிருந்தால் செல்ல முன்னரே அவர் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் சென்று மக்களின் காணிகளை பார்வையிட்டதன் பின்னர் பல்வேறு விதமாக பேசுவதில் எவ்வித நியாயமும் இல்லை. தற்போது எதிர்க்கட்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வது எவ்விதத்திலும் நியாயமற்ற ஒன்றாகும்.

இந்நிலை தொடரும் பட்சத்தில் நல்லாட்சிக்கு தமிழ் தே.கூட்டமைப்பு வழங்கிய ஆதரவு தொடர்பில் மாற்றம் ஏற்படுமா என வினவியபோது, அதற்கு அவர் பதிலளிக்கையில்,

தொடர்ச்சியாக தமிழ் மக்களிற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுமிடத்து, நல்லாட்சி அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவு தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-15)

# காணிப்பிணக்கு காரணமாக கட்டட நிதி திரும்பும் நிலையில்

## ஆவன செய்யுமாறு மாற்றுவலுவுடையோர் கோரிக்கை






சிறுவர் நிதியத்தின் 50 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை பொது வைத்தியசாலை வளாகத்தினுள் மாற்றுவலுவுடையோருக்கென கட்டப்பட்டு வந்த சிகிச்சை நிலையம் காணிப்பிணக்கு காரணமாக வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் அந் நிதி வேறொரு பிரதேசத்திற்கு திரும்பிச் செல்லும் அபாய நிலை காணப்படுவதாக பிரதேச மாற்றுவலுவுடையோர் அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக காணிப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு இக் கட்டட வேலைகள் தொடர்ச்சியாக இடம்பெற உரிய நடவடிக்கைக்களை மேற்கொள்ள வேண்டுமென மாற்றுவலுவுடையோர் அமைப்புக்கள், பொது மக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# கிளிநொச்சியில் நான்காம் நாள் அமர்வு



காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் ஜனாதிபதி ஆணை க்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சிய விசாரணைகளைப் பதிவு நேற்றுடன் நிறைவு பெற்றது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான நான்காம் நாள் அமர்வில் சாட்சி விசாரணைகளைப் பதிவு செய்வதற்காக பூநகரி, பச்சிலைப்பிரிவு ஆகிய இடங்களைச் சேர்ந்த 194 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

## தலைமன்னாரில் கைதான 21 மீனவர்களுக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 21 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் - தங்கச்சி மடம பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.


இதனையடுத்து இவர்கள் கடற்றொழில், நீரியல் வளத்திணைக்களத்தின் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் அன்றைய தினம் பிற்பகல் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போதே மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா விளக்கமறியலுக்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும் கைதான மீனவர்களில் வயது குறைந்த சிறுவர் தொழிலாளர் ஒருவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை மன்னாரில் உள்ள சிறுவர் இல்லத்தில் அனுமதிக்குமாறும் நீதவான உத்தரவிட்டார். (2-281)




## அமைச்சர் காமினி ஜயவிக்ரம நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்




வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்சுந்தரம் அருமைநாயகத்தை முற்பகல் 11 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது மாவட்டத்திலுள்ள சரணாலயங்களை மீள அமைத்துத்தருமாறு அமைச்சரிடம் அரசாங்க அதிபர் கேட்டிருந்தார்.

இதேவேளை கிளிநொச்சி இரணைமடு குளத்தில் சரணாலயம் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா பயணிகளை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்காக மக்கள் குடியிருப்பு காணிகளை பெற்றுகொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாவும் குறிப்பாக யாழ். மாவட்டத்திலேயே இந்நிலைகாணப்படுவதாவும் தெரிவித்த அமைச்சர் ஏனைய மாவட்டங்களில் அவ்வாறான பிரச்சினைகள் இல்லை எனவும் குறிப்பிட்டார். (2-15)

## தமிழீழ வைப்பகத்தின் தங்க நகைகளை மீட்கும் பணி மே 3 இற்கு ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நீதிமன்றத்தின் அனுமதியுடன் தங்க அகழ்வுப் பணியை கடந்த 26 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்திருந்தனர்.

குறித்த இடம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வரும் முன்னர் தமிழீழ வைப்பகத்தின் தலைமைச் செயலகத்திற்கு முன்னால் இருந்த தனியார் ஒருவரின் வெற்றுக்காணியில் இருந்த ஆழமான மண் கிணற்றுக்குள் மக்கள் அடைவு வைத்த தங்க நகைகளைப் போட்டு கிணற்றை தூற்றியுள்ளனர். இந் நிலையில் தமிழீழ வைப்பகத்துடன் தொடர்புடைய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தினூடாக தகவலை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து குறித்த அகழ்வுப் பணி நடைபெற்றது.

இந்நிலையில் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையிலும் குறித்த அகழ்வுப்பணிக்காக பெரிய அளவிலான பெக்கோ இயந்திரம் கிடைக்கவில்லை எனவும் புதுக்குடியிருப்பு பிரேதேச சபையினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து அகழ்வுப்பணிகள்எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதிக்குபுதுக்குடியிருப்புபொலிஸாரை பாதுகாப்பு வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## காணாமற் போயிருந்த மாணவன் மீட்கப்பட்டு பெற்றோருடன் இணைப்பு

முல்லைத்தீவுதீர்த்தக்கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து கடந்த 19 ஆம் திகதி பாடசாலைக்கு செல்வ தாக கூறிச் சென்று மாலை வரை வீடு திரும்பாத நிலையில் காணாமற் போனதாக கூறப்பட்ட கண்ணன் சுதர்சன் (வயது-15) என்ற மாண வன் கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள்குழுவினரால்கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோருடன் இணைக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாபமாணவன்தனது குடும்பக் கஷ்ட நிலை காரணமாக தனது 18 வயது நிரம்பிய நண்பர்ஒருவருடன்கொழும்பிற்கு வேலை தேடிச் சென்றதாகவும்காணாமற்போனமை தொடர்பில் பெற் றோரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவினரின் துரித செயற்பாட்டை அடுத்து குறித்த மாணவன் மீட்கப்பட்டு பெற்றோருடன் இணைக்கப் பட்டார் என பிரஜைகள் குழு வின் இணைப்பாளர் இ.டக் ளஸ் தெரிவித்துள்ளார். (2-310)

## இராணுவ வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை வடுவிப்பதற்கு உடன் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம்தமிழ்தேசியக்கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் - நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளின் தகவல்களையும் அவர் தனது கடிதத்தில் இணைத்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட பொது மக்களின் காணிகளை அபகரிக்கும் திட்டத்தை நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் இன்றும் திறந்த வெளிச்சிறைச்சாலையில் புறம்பான ஒரு தீவில வாழ்வதைப் போன்ற உணர்வே ஏற்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். (2-281)

## கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுடனான விசேட சந்திப்பு

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்ட சங்கங்களை கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் சந்தித்து விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதில் கடந்த ஆண்டிலே வழங்கப்பட்ட சில திட்டங்கள் தொடர்பிலும் அதனைப் பெற்றுக்கொண்ட சங்கங்களின் நிலைகள் தொடர்பிலும் தற்போது திட்டங்கள் வழங்கப்பட்ட சங்கங்களின் பிரதி நிதிகளுடன் வழங்கப்பட்ட திட்டங்களை சரியான கண்காணிப்புடன் நடத்தும் நோக்கிலுமான விடயங்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (2-281)

# இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை நிர்வாக சேவை
# போட்டிப் பரீட்சை-2016 மாதிரி வினாத்தாள்
# நுண்ணறிவும் பொது அறிவும் SLEAS, SLAS

◆ 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள அடைப்புக்குள் மூன்று எழுத்துக்களைப் புகுத்தினால் கருத்துள்ள இரண்டு சொற்களை உருவாக்க லாம். அடைப்புக்குள் புகுத்தப்படும் மூன்று எழுத்துக்களும் முதற் சொல்லின் கடைசி எழுத்துக்களாகவும் இரண்டாவது சொல்லின் முதல் எழுத்துக்களாகவும் அமைதல் வேண்டும். உமக்கு உதவும் பொருட்டு ஒவ்வொரு வினாவுடனும் இரு சொற்களுக் குமான இருசாடைக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1. அடைக் (...............) பகம்
   1. ஒரு பிரபந்தம்
   2. புகலிடம்
2. சா(...............) ரம்
   1. ஒரு வகைப் பூஞ்செடி
   2. ஆலோசனை
3. பம் (..........) பரை
   1. விளையாடும் கருவி
   2. தலைமுறை
4. மர (...........) பம்
   1.நவமணிகளில் ஒன்று
   2.மாலை
05. சுயம் (.......)பு
   1.தலைவி தன் விருப்பத்திற்கு அரசர் கூட்டத்தில் கணவனைத் தெரிந்து கொள்ளுதல்
   2. எல்லை
6.கச் (.......) பரம்
   1.செம்மை
   2. தில்லை

◆ பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடை தருக

◆ அஜித், பந்து, கவிந்த, சுசுத் ஆகிய நான்கு நண்பர்களும் இரவுச் சாப்பாட்டிற்காக ஒன்று கூடினார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு தொழில்களில் உள்ளவர்கள்.

◆ இவர்களின் வேறு பெயர்கள் குரே, பர்ணாந்து, சில்வா,பெரேரா ஆகும். இவை அனைத்தும் முதலில் கொடுக்கப்பட்ட பெயர்களின் ஒழுங்கு முறையில் தரப்பட வில்லை.

◆ இரவு சாப்பாட்டு வேளையில் அஜித்தும், பந்துவும் வைத்தியரை விட அதிகமாகச் சாப்பிட்டனர்.

◆ அஜித் ஒருவகை உணவை முதலில் பந்துவுக்கும், பெரேராவுக்கும், எழுத்தா ளருக்கும் பரிமாறி பின்பு தனக்கும் பரிமாறிக் கொண்டார்.

◆ பந்து மற்றுமோர் உணவு வகையினை முதலில் இன்ஜினியருக்கும், பெரோ ராவுக்கும் பின்பு கவிந்தவுக்கும் பரிமாறித் தனக்கும் பரிமாறிக் கொண்டார்.

◆ இரவு வேளை சாப்பாட்டின் பின்பு கவிந்தவைவிடவும் நேரத்துடனேயே சில்வா வீட்டிற்குச் சென்று விட்டார். அவர் ஒரு இன்ஜினியர்.

◆ வைத்தியர் குரேயை விட அதிகமான உணவை உட்கொண்டார்.

◆ பர்ணாந்து, இன்ஜினியரை விட நேரத்துடனேயே வீட்டிற்குச் சென்று விட்டார்.

◆ பந்து ஓர் வக்கீலாகும். இவரது மறுபெயர் பர்ணாந்து ஆகும்.

◆ சுசுத் வைத்தியரல்லர்.


07. அஜித்தின் தொழில் யாது?
08. சுசுத்தின் தொழில் யாது?
09. கவிந்தவின் தொழில் யாது?
10.அஜித்தின் மறுபெயர் என்ன?
11. கவிந்தவின் மறுபெயர் யாது?
12. சுசுத்தின் மறுபெயர் யாது?

◆ கீழ்வரும் வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டுள் ளன. 1 முதல் 5 வரையிலான இலக்கங்கள் ஒரு விடுதியிலுள்ள அறைகளைக் குறித்து நிற்கின்றன. ஒவ்வொரு இலக்கத்தின் கீழ் உள்ள ஆங்கில எழுத்துக்கள் மாணவர்கள் பெயர்களைக் குறித்து நிற்கின்றன. ஒவ்வோர் அறையிலும் தங்கி இருக்கும் மாணவர் களின் பெயர்களைக் கண்டுபிடிக்க அறையில் தங்கி இருக்கும் மாணவரது பெயரா னது இவ் அட்டவணையிலே நிலைக்குத்தான நிலையிலோ கிடையான நிலையிலோ மீண்டும் தரப்படவில்லை என்பதைக் கவனிக்க. ஒவ்வோர் வினாவுக்குமுரிய விடையை அதற்குரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| P | S | S | R | D |
| R | R | D | P | R |
| S | L | D | D | D |
| P | L | R | S | S |
| D | D | P | S | L |
| R | S | P | R | R |

13. 01 ஆம் இலக்க அறையில் தங்கியுள்ள மாணவனின் பெயர் என்ன?
14. 02 ஆம் இலக்க அறையில் தங்கியுள்ள மாணவனின் பெயர் என்ன?
15. 03 ஆம் இலக்க அறையில் தங்கி இருக்கும் மாணவனின் பெயர் என்ன?
16. 05 ஆம் இலக்க அறையில் தங்கி இருக்கும் மாணவனின் பெயர் என்ன?

◆ அருகில் உள்ள சில்லுகள் இரண்டும் தொடுகையில் உள்ளன. பெரிய சில்லு ஒருமுறை சுழலச் சிறிய சில்லு 4 முறை சுழலும் அம்புக்குறி காட்டும் திசையில் பெரிய சில்லு சுழலும் போது.




17. சிறிய சில்லின் எப்புள்ளி பெரிய சில்லின் H என்ற புள்ளியை முதல்தொடும்?

18. சிறிய சில்லின் புள்ளி குறிப்பிட்ட எந்தெந்தப்புள்ளிகள் பெரிய சில்லின் பெயர் குறிப்பிட்ட புள்ளிகளை ஒரு போதும் தொடாது?

19. முதலாவது பொருந்தும் தொடுகை படத்தில் காட்டப்பட்டுள்ளது. (fe) எனக் கொண்டால் மூன்றாவது பொருந்தும் தொடுகை எது?

20. பெரிய சில்லு இடம் சுழியாக சுற்றப்படின் D என்ற புள்ளி சிறிய சில்லின் எப்புள்ளியுடன் பொருந்தும்?

◆ 21தொடக்கம் 24 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய திருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக. குறித்த செயற்றிட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்குக் குறித்த ஒரு குழுவில் 4 பேரை ஆசிரியர் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அவருடைய கவனம் 7 மாணவர்களில் சென்றது. அவர்கள் கேசவன், ராஜன், முகுந்தன் என்ற மாணவர் களும் கீதா, மோகனா, கவிதா, சாந்தி என்ற மாணவிகளும் ஆவர். இவர்கள் அனைவரும் இப் பணியைச் செய்வதில் ஒரே அளவு திறமை உள்ளவர்கள் ஆவர். குழுவில் குறைந்த பட்சம் இரு மாணவர்களும் இரு மாணவிகளும் இடம்பெறுதல் வேண்டும். குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். ராஜனும் கீதாவும் ஒன்றாகப் பணியாற்ற முடியாதவர்கள் என்பதையும் முகுந்தனும் சாந்தியும் ஒருமிக்க பணியாற்ற முடியா தவர்கள் என்பதையும் கீதாவும் கவிதாவும் ஒருமிக்க பணியாற்ற முடியாதவர்கள் என்பதையும் ஆசிரியர் கூறினார்.

21. குழுவுக்கு கவிதா தெரிந்தெடுக்கப்பட்டால் குழுவில் இடம்பெறத்தக்க ஏனைய மூன்று பிள்ளைகளும் யாவர்?
   1. கேசவன், முகுந்தன், கீதா
   2. கேசவன், முகுந்தன், மோகனா
   3. கேசவன், முகுந்தன், சாந்தி
   4. கேசவன், ராஜன், கீதா

22. குழுவுக்கு கீதா தெரிந்தெடுக்கப்பட்டால் குழுவில் இடம்பெறத்தக்க ஏனைய மூன்று பிள்ளைகளும் யாவர்?
   1.கேசவன், ராஜன், கவிதா
   2. கேசவன், முகுந்தன், மோகனா
   3. கேசவன், முகுந்தன், சாந்தி
   4. கேசவன், முகுந்தன், கவிதா

23. பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது எது?
   1.ராஜனையும் முகுந்தனையும் ஒரு மிக்க ஈடுபடுத்தலாம்
   2.முகுந்தனையும் கவிதாவையும் ஒருமிக்க ஈடுபடுத்தலாம்
   3.முகுந்தனையும் மோகனாவையும் ஒருமிக்க ஈடுபடுத்தலாம்
   4.முகுந்தனையும் சாந்தியையும் ஒரு மிக்க ஈடுபடுத்தலாம்


24.பின்வரும் கூற்றுக்களுள் திருத்தமானது எது?
   1. கீதாவையும் கேசவனையும் ஒரு மிக்க ஈடுபடுத்த முடியாது.
   2.கவிதாவையும் ராஜனையும் ஒருமிக்க ஈடுபடுத்த முடியாது.
   3.கீதாவையும் கவிதாவையும் ஒரு மிக்க ஈடுபடுத்த முடியாது.
   4. கேசவனையும் கவிதாவையும் ஒரு மிக்க ஈடுபடுத்த முடியாது.

25. நகரில் வாடகை கார் கட்டணம் முதல் 10 km இற்கு ரூ.22.50 உம் பயணத்தின் எஞ்சிய பகுதிக்காக km இற்கு ரூ.17.50 உம் ஆகும். ஒரு நாள் இரவில் நான் எனது மூன்று நண்பர்களுடன் ஒரு வாடகைக் காரில் வீட்டிற்குச் சென்றேன். நாம் காரின் வாடகையை பகிர்ந்து கொண்டோம். எனது பங்கு ரூ.82.50 ஆகும். எமது பயணத்தின் தூரம் யாது?

26. குணபாலனின் தற்போதைய வயது அவனது மகன் சுமனின் வயதிலும் நான்கு மடங்காகும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் குணபாலனின் வயது சுமனின் வயதிலும் ஏழு மடங்கினதாக இருந்தது.
குணபாலனின் தற்போதைய வயது என்ன?

◆ 27 தொடக்கம் 31 வரை ஐந்து சொற்களில் வேறுபட்ட சொல்லினை தெரிந்து கோடிடுக.

27.மிளகாய்,பாகற்காய், வெண்டிக்காய், கத்தரிக்காய் , பயற்றங்காய்.
28. நாய், ஆடு, கோழி, எருது, தாரா.
29.வீடு, இல்லம், மனை, மாளிகை, உப்பரிகை.
30. கத்தி, கோடரி, அலவாங்கு, பிக்கான், மண்வெட்டி.
31. துள்ளு, ஆடு, நட, நில், ஓடு.




◆ தாயக்கட்டையொன்றின் எவையேனும் எதிர்ப்பக்கச் சோடிகளில் காணப்படும் புள்ளிகளினது எண்ணிக்கையினது கூட்டுத் தொகை ஏழு ஆகும். அவ்வாறான நான்கு தாயக்கட்டைகளை ஒன்றாகச் சேர்த்து ஒட்டிக் கீழே தரப்பட்டுள்ள தொகுதியாக்கப்பட்டுள்ளது. ஒன்றை ஒன்று நோக்கும் வண்ணம் ஒட்டப்பட்டுள்ள பக்கச்சோடிகளில் காணப்படும் புள்ளி களின் கூட்டுத்தொகை எட்டு ஆகும்.

32. பக்கம் A இல் காணப்படும் புள்ளிகள் எத்தனை?
33. பக்கம் C இல் காணப்படும் புள்ளிகள் எத்தனை?
34. இத்தாயக்கட்டை தொகுதி ஆக்கப்பட்ட முறைக்கு அமைவாக மற்றுமொரு தாயக்கட்டையை A,B,C,D ஆகிய பகுப்புகளுள் எந்த முகப்பின் மீது ஒட்ட முடியாது?

◆ எளிய சதுரமுகி ஒன்று 6 பக்கமும் நிறம் பூசப்பட்ட 64 சிறிய சம அளவான சதுரமுகிகளாக வெட்டப்பட்டன.

◆ சிறிய சதுரமுகிகள் சிலவற்றில் மூன்று முகங்கள் மாத்திரம் நிறம் காணப்பட்டது.

◆ சிலவற்றில் இரண்டு முகங்களில் நிறம் காணப்பட்டது.

◆ சிலவற்றில் ஒரு முகத்தில் நிறம் காணப்பட்டது.


◆ சிலவற்றில் எந்த முகத்திலும் நிறம் காணப்படவில்லை.

35.இரண்டு பக்கங்களிலும் நிறம் பூசப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?
36.ஒரு பக்கமும் நிறம் பூசப்படாத சிறிய சதுரமுகிகள் எத்தனை? (தொடரும்)


ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கழிவகற்றலும் அதன் முகாமைத்துவமும்




கழிவு முகாமைத்துவததில் இந்த "4R" வகைமுறை ("4R"-System) அமுல்படுத்தப்படும்போது முதலாவதாக விரும்பப்படும் செயற்பாடு கழிவுகள் உருவாகுவதை தடுத்தல் (Prevention) அல்லது குறைத்தல் (reduce) ஆகும். அதாவது உற்பத்திப் பொருட்களை மீளப் பயன்படுத்தல் (use of second hand pro du cts), மீள் நிரப்பக்கூடிய (refillable), மீளப் பாவிக்கப்படக்கூடிய (reusable) பொருட்களை உற்பத்தி செய்தல் (உதாரணமாக பிளாஸ்ரிக் பைகளுக்கு பதிலாக பருத்தித் துணி பைகள் பயன்படுத்துதல்), நுகர்வோரை உடனே அகற்றக் கூடிய பொருட்கள் (disposable items) பாவிப்பதை தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளால் உருவாக்கப்படும் கழிவின் அளவு குறைவடையும். படிநிலையமைப்பின் அடுத்த தெரிவு மீள் சுழற்சி (recycling) ஆகும். இது ஒரு வளத்தை மீளப் பெறும் செயன்முறையாகும். நகர திண்மக் கழிவுகளில் உயிர் பிரிகையடையக் கூடிய சேதன நிலையிலுள்ள கழிவுகள் (பச்சைக் கழிவுப் பொருட்கள், மற்றும் வர்த்தக ரீதியான அல்லது வீட்டு ரீதியான உணவுக் கழிவுகள்) கூட்டாக்கப்பட்டு காற்றின்றிய நிலையில் பிரிகையடையச் செய்யப்பட்டு பெறப்பட்ட விளைவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்டு கூட்டு பசளையாக (mulchor co mpost) விவசாய மற்றும் நிலவடிவமைப்பு (La ndscaping) தேவைகளுக்காக பாவிக்கப்படுகிறது. இதன்போது கிடைக்கும் கழிவுவாயுக்கள் (உ-ம் மெதேன்) சேகரிக்கப்பட்டு எரிபொருளாக பயன்படுத்தப்படும்.




சேதன நிலையில் இல்லாத மீள் சுழற்சிக்குட்படுத்தக்கூடிய பொருட்கள் வேறாக சேகரிக்கப்பட்டு அவற்றை மூலப் பொருளாக பாவித்து அதே பொருட்கள் புதிதாக மீள் உற்பத்தி செய்யப்படுகின்றன. (கண்ணாடிப் போத்தல்கள், பொலி எதிலின் போத்தல்கள், குடிபானக கொள்கலன்கள், பழைய கடிதாசி, செப்புக்கம்பி, வயர், PVC, உருக்கு, உலோகங்கள் போன்றவை).

மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத பொருட்களிலிருந்து பயன்படக்கூடிய வெப்பசக்தி, மின்சக்தி அல்லது எரிபொருட்கள் கழிவுகளின் வேறுபட்ட செயற்பாடுகளின் மூலம் பெறப்படுகின்றன. (Energy re covery from waste).

காற்றின்றிய பிரிகையடைதல் (anaerobic dige stion) ஒரு இயற்கையாக நடைபெறும் செயற்பாடாகும். இங்கு கழிவில் உள்ள சேதனப் பதார்த்தங்கள் ஒட்சிசன் அற்ற நிலையில் பிரிகையடைந்து (anaer obic decomposition) எளிய இரசாயனக் கூறுகளை தருகின்றது.


கழிவுகளின் நேரடியான கட்டுப்படுத்தப்பட்ட எரித்தல் (870-1200°C) செய்முறையின் போது (incineration) கழிவுகளின் கனவளவு அதிகளவில் குறைக்கப்படுவதுடன் சாம்பல் (ash), கழிவு வாயு (fuel gas), வெப்பசக்தி (heat energy) என்பன பெறப்படுகின்றன. வைத்தியசாலைக் கழிவுகளை அழிப்பதற்கு இது ஒரு சிறந்த முறையாகும். சில நாடுகளில் இவ்வாறு பெறப்படும் வெப்பசக்தி மின் சக்தியாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இங்கு வெளிவரும் வாயுக்கள் வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்பட முதல் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். இங்கு பெறப்படும் சாம்பல் தொற்று அற்றதாக இருக்கும்.

ஒட்சிசன் அற்ற நிலையில் உயர் வெப்ப நிலைக்கு கழிவுகளை வெப்ப பரிகரிப்பு செய்து கழிவில் உள்ள சேதன காபனை உடைத்து வாயு, திரவ எரிபொருள் கலவை (mixt ure of gaseous and liquid fuel) மற்றும் திண்ம மீதி என்பவற்றை உருவாக்குதல் (Pyrolysis) 200-300°C இல் நடைபெறுகின்றது. இங்கு ஆவியாகும் பொருட்கள் வெளியேறியபின் கரி (Charcoal) உருவாக்கப்படும்.


கரி மேலும் தூய்மைப்படுத்தப்பட்டு செயற்பாடுள்ள காபன் (activated carbon) பெறப்படும்.

வாயுவாக்கம் (gas sification) செயற்பாட்டில் கரியானது நீராவியுடன் தாக்கமடைந்து காபன் மொனோ ஒட்சைட்டு (CO) ஐதரசன் வாயு ($H_2$) என்பவை உருவாக்கப்படுகின்றன.

இங்கு 700°C யிலும் கூடிய வெப்பநிலையில் பகுதியான ஒட்சியேற்றத்தால் காபன் கொண்ட பொருடகள் $H_2$, CO கொண்ட வாயுக் கலவையை உருவாக்கும். இது "Syngas" எனப்படும். இது மின்சக்தியை உருவாக்க பயன்படுவதுடன், எரிபற்று நிலையுடையதால் எஞ்சின் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.




வாயுவாக்கத்தின் ஒரு முறையான "plasma arc" வெப்ப பரிகரிப்பு முறையில் நகர திண்ம கழிவுகள் 3000-




10000°Cக்கு வெப்பப்படுத்தப்பட்டு சக்தியானது மின்னியல் கசிவுகளாக (Electrical discharge) வெளியேற்றப்படுகின்றது. pyrolysis, gassificat ion போன்ற வெப்பப் பரிகரிப்புக்கள் மூடிய தொகுதியில் உயர் அமுக்கத்தில் பொதுவாக நடத்தப்படுகின்றன.

எல்லா செயன்முறைகளின் போதும் கழிவின் உயிர்த்திணிவில் (bio-mass) உள்ள கலோரிப் பெறுமானத்திற்கேற்ப சக்தி உருவாக்கப்படும்.

இவ்வாறு கழிவில் இருந்து சக்தி பெறப்படுவது பாதுகாப்பானதும், மலிவானதும் ஆகும். இதனால் சக்திக்காக சுவட்டு எரிபொருட்களின் (fossil fuels) பாவனை குறைவதுடன் கழிவுகள் புதைப்பதற்கு தேவையான நிலத்தை குறைத்து இயற்கை வளங்களையும் பாதுகாக்கலாம். இதனால் மெதேன் வெளியேற்றம் குறைவடைந்து பூலோக வெப்பமடைதல் (global war ming) குறைகின்றது.

இந்த "4R" வகைமுறை பல அனுகூலங்களைத் தருகின்றது. கழிவுகளின் குறைவான உருவாக்கம் (red uce waste generation), புதை நிலங்களின் தேவையைக் குறைத்தல் (save landfill space), மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களையும் சூழல் அழகையும் பேணல், வளி, மண், நீர் மாசடைதலைத் தவிர்த்தல், சக்தியை சேமி த்தல், தொழிற்சாலைகளு க்கு மூலப் பொருட்களை (raw materials) வழங்கல், தொழில் வாய்ப்பு, சூழற் தொகுதிகளை நிலை குலையாமல் வைத்திருத்தல் (keep habitatsintact), பச்சைவீட்டு வாயு (Green House Gas) வெளியேற்றத்தைக் குறைத்தல், புதிய பொருட்களைச் செய்வதற்குத் தேவையான சக்தி மற்றும் வளங்கள் போன்றவற்றை மீள் சுழற்சி மூலம் குறைத்தல் போனறவையாகும்.

பாடசாலை மட்டத்தில் அதாவது சிறு வயதிலிருந்தே கழிவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் கழிவை எவ்வாறு பயனுள்ள வழியில் பாவிக்கலாம் என்பது பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவேண்டும்.

ஆகவே ஒவ்வொரு வரும்சூழலில் அக்கறை கொண்ட பிரஜைகளாக இருந்து உத்தியான முறைகளைப் பாவிப்பதன் மூலம் பொருளாதார, சமூக, சூழலியல் ரீதி யில் நன்மைகளைப்

திருமதி கு.நிரஞ்சன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 159

ரேடார் (RADAR) கருவிகளில் பயன்படுத்தப்படும் தத்துவம் எது ?

புதிர் 159 இற்கான விடைகளை 09.05.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

### புதிர் 158 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.ராஜகோபால்
அடைக்கலந்தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை.

புதிர் 158 க்கான கேள்வியும் விடையும்:

புற்றுநோயை (Leukemia) குணப்படுத்த பவளப் பாறை தொகுதிகளில் (Coral reef sys tem) பொதுவாக காணப்படும் Sea Sponges இல் இருந்து பெறப்படும் மருந்தின் பெயர் என்ன?

Ara-C developed from extracts of sponges found on a Caribbean reef

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 159

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

# பிரேசில் நாட்டில் ஷிகா வைரஸ் நோய்க்கு 91,000 பேர் பாதிப்பு

(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் ஷிகா வைரஸ் நோய் இன்னும் கடுமையாக பரவி வருகிறது. அங்கு இதுவரை 91, 387 பேர் ஷிகா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது.

பிரேசில், கொலம்பியா உள்ளிட்ட தென்அமெரிக்க நாடுகளில் ஷிகா வைரஸ் நோய் கடுமையாக பரவியது. இந்த நோய் கருவில் வளரும் குழந்தைகளை தாக்குகிறது.


இதனால் பிறக்கும் குழந்தைகளின் மூளை பாதிக்கப்படுகிறது. எனவே சிறிய தலையுடன் பிறக்கின்றன. இது ஷிகா வைரஸ் கிருமிகளை பரப்பும் நுளம்புகளால் உண்டாகிறது.

பிரேசில் நாட்டில் ஷிகா வைரஸ் நோய் இன்னும் கடுமையாக பரவி வருகிறது. அங்கு இதுவரை 91, 387 பேர் ஷிகா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 30, 286 பேரை வடகிழக்கு பகுதியில் தாக்கியுள்ளது.

இத் தகவலை பிரேசில் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. மேலும் இந் நோய் தாக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர். ஷிகா நோய் உடலில் பல ஆண்டுகளாக மறைந்து இருப்பதாகவும் பாலியல் தொடர்பு மூலம் பரவுவ தாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த மற்றும் சிகிச்சை முறைகள் இன்னும கண்டுபிடிக்கப்படவில்லை. (இ)

## சினிமா பாணியில் வாகனத்தை வடிவமைத்து தாக்குதல் நடத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள்



சினிமா பாணியில் வாகனங்களை தயார் செய்து எதிரணியினரை அழிக்கும் புதிய திட்டத்தை ஐ.எஸ். அமைப்பினர் செயற்படுத்தி வருவதாக தெரிய வந்துள்ளது.

அண்மையில் குர்து படைகளுக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பினர் பயன்படுத்திய தற்கொலை வெடிகுண்டு வாகனம்ஒன்று ஹொலிவுட் படத்தில் வருவது போன்று அமைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த வாகனத்தை செலுத்தும் சாரதிக்கு எவ்வித ஆபத்தும் நேரிடாத வகையில் அமைத்துள் ளனர். குர்து படையினருக்கு எதிராக செலுத்தப்பட்ட இந்த வாகனம் அவர்களை நோக்கி விரைந்து சென்றுள்ளது.

அதி வேகமாக விரைந்துவரும் ஐ.எஸ். தற்கொலைப்படை வாகனத்தை தடுத்து நிறுத்தும் நோக்கில் குர்து படையினர் தொடர் தாக்குதலை நிகழ்த்தி வந்துள்ளனர்.

கடுமையான தாக்குதலை குர்து படையினர் நடத்திய பின்னரும் அந்த வாகனம் குர்து படையினரை நோக்கி வந்த வண்ணம் இருந்துள்ளது. முடிவில் குர்து படையினர் அனுப்பிய ஏவுகணையால் அந்த வாகனம் தீப்பிழம்பாக மாறி சிதைந்துள்ளது.

இதனால் அந்த பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பல குர்து படையினரின் உயிர் காக்கப்பட்டது. வாகனத்தை ஏவுகணை சிதைத்து தள்ளியதை அங்கிருந்த குர்து படையினர் குரல் எழுப்பி கொண்டாடியுள்ளனர்.

ஈராக்கின் பல்லூஜா பகுதியில் நடைபெற்ற இந்த தாக்குதல் புது வகையானது என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர். போராட்டத்தின் உக்கிரம் காரணமாக ஐ.எஸ்.அமைப்புகளும் குர்து படையினரும் பெரும்பாலும் கெரில்லா பாணி யுத்த முறையை இங்கு பயன்படுத்திவருகின்றனர்.

பொதுவாக ஐ.எஸ். அமைப்பினர் வெடிகுண்டு நிரப்பிய வாகனத்தை கூட்டநெரிசலில் அல்லது மக்கள் கவனம் செலுத்தாத வகையில் வெடிக்கச் செய்து அதிக சேதாரத்தை ஏற்படுத்துவார்கள்.

ஆனால் தற்போது மாட் மாக்ஸ் ஹொலிவுட் சினிமா பாணியில் வாகனம் வடிவமைத்து தாக்குதலை நடத்துகின்றனர். (இ)

## வேட்புமனு தாக்கலின்போது விஜயகாந்த் கேட்ட கேள்வி



வேட்புமனு தாக்கல் செய்யும் போதே ஏன் உறுதிமொழி ஏற்க வேண்டும் என்று தேர்தல் அதிகாரியிடம் கேள்வி எழுப்பினார் தேமுதிக தலைவர் விஜயகாந்த்.

உளுந்தூர்பேட்டையில் விஜயகாந் போட்டியிடுகிறார்.

இதை யொட்டி, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் நண்பகல் தனது மனைவி பிரேமலதா, மைத்துனர் சுதீஷ், கட்சி நிர்வாகிகளோடு விஜயகாந் வருகை தந்தார். வேட்புமனு தாக்கல் செய்ததும், உறுதிமொழிஏற்பது வழக்கம். அதே போல விஜயகாந்தையும் உறுதி மொழி எடுக்குமாறு, தேர்தல் அலுவலர் முகுந்தன் அறிவுறுத்தினார்.

இதனால் சற்று கோபமடைந்த விஜயகாந் "வேட்புமனு தாக்கல் செய்யும்போதே உறுதி ஏற்கச் சொல்கிறீர்கள். பின்னர் வேட்புமனு பரிசீலனையில் சிலரது மனுக்கள் நிராகரிக்கப்படுகிறது.அல்லது சிலர் வாபஸ் பெற்று விடுகின்றனர்.

எனவே ஒரேடியாக வேட்புமனு பரிசீலனைக்குப்பின், ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் வேட்பாளர்களிடம் உறுதி மொழி ஏற்கச் செய்யலாமே" என்றார்.


விஜயகாந் முன்வைத்த வாதத்தில் நியாயம் இருப்பதாகவே அங்கிருந்தவர்கள் கருதினார்கள்.

இருப்பினும், விதிமுறைப்படி அப்படி நடைபெறுவதில்லை என்பதால், வட்டாட்சியர் என்ன செய்வது என்று தெரியாது திகைத்தார்.

இதையடுத்து பிரேமலதாவும், கட்சி நிர்வாகிகளும், விதிமுறைப்படிதான் அதிகாரியால் செயற்பட முடியும்.

எனவே உறுதி மொழியை வாசித்துவிடுங்கள் என்று அறிவுறுத்தினர். இதையடுத்து விஜய காந் உறுதிமொழியை வாசித் தார். இதனால் வேட்புமனு தாக்கல் செய்த இடத்தில் ஒரு சில நிமிடங்கள் சலசலப்பு நிலவியது. (இ)

## தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக தமிழகத்தில் இதுவரை ரூ.66 கோடி பறிமுதல்



(சென்னை)

தேர்தல் நடத்தை விதிமுறை காரணமாக தமிழகத்தில் கடந்த 4ஆம் திகதி முதல் இதுவரை 24 நாட்கள் நடத்தப்பட்டுள்ள அதிரடி சோதனைகளில் ரூ.66 கோடி மதிப்புள்ள பணம், தங்கம் மற்றும் பொருட்கள் பிடிபட்டுள்ளன.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான நடத்தை விதி முறைகள் கடந்த 4 ஆம் திகதி அமலுக்கு வந்தது.

இதையடுத்து 234 தொகுதிகளையும் தேர்தல் ஆணையம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

குறிப்பாக வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க 300 இற்கும் மேற்பட்ட பறக்கும் படைகளை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.

இது தவிர வாக்காளர்களுக்கு கொடுக்க பணம் மற்றும் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தால் தகவல் கொடுக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

அதற்கு பலன் அளிக்கும் வகையில் நிறைய பேர் ரகசிய தகவல்களை போன் மூலம் அளித்தனர்.

அதன் பேரில் தமிழகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தேர்தல் ஆணையம் சோதனை நடத்தியது.

வருமான வரித்துறை அதிகாரிகளும் இந்த சோதனையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த 4ஆம் திகதி முதல் இதுவரை 24 நாட்கள் நடத்தப்பட்டுள்ள அதிரடி சோதனைகளில் ரூ.66 கோடி மதிப்புள்ள பணம், தங்கம் மற்றும் பொருட்கள் பிடிபட்டுள்ளன.

5 மாநில சட்டசபை தேர்தலில் மற்ற 4 மாநிலங்களை விட தமிழ் நாட்டில் மட்டுமே இவ்வளவு அதிகமான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு இன்னும் 2 வாரம் இருப்பதால் மேலும் சில கோடி ரூபாய் பறிமுதல் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த கால தேர்தல்களிலும் பறக்கும் படையினரிடம் பணம் பொருட்கள் சிக்கியது.

ஆனால் இந்த தேர்தலில் ரூ.66 கோடி பறிமுதல் ஆகி இருப்பது புதிய சாதனையாக கருதப்படுகிறது.

தமிழ்நாட்டில் அதிக பணம் தொடர்ந்து பறிமுதல் ஆவதால் கூடுதல் பார்வையாளர்களை அனுப்ப தலைமை தேர்தல் ஆணையம் ஆலோசித்து வருகிறது. (இ)

## அரசின் தீர்மானத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### 382 பேர் கைது

எகிப்தில் அண்மையில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட 382 பேரை எகிப்திய பொலிஸார் கைது செய்துள்ளதாக நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

எகிப்திற்கு சொந்தமான இரண்டு தீவுகளை சவுதி அரேபியாவிடம் ஒப்படைப்பதற்கு எகிப்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள சர்ச்சைக்குரிய தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டத்தின் போது 6 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உட்பட 380 இற்கும் மேற்பட்டோரை எகிப்திய பொலிஸார் கைது செய்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் நால்வர் பிரான்ஸ் நாட்டவர்கள் எனவும் டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒரு ஊடகவியலாளர்களும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தின் போது மாத்திரம் குறைநதது 286 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.(இ)

# ஏழை, எளியோரின் துயர் தீர்க்கும் புனித நீக்கிலாரின் திருவிழா

## புனித நீக்கிலாரின் வரலாறு



இந்து சமுத்திரத்தின் முத்தாகிய இலங்கைத் தீவின் எழில்மிகு மணி முடியாகத் திகழும் யாழ்.குடா நாட்டின் மேற்குக் கரையின் கடலலையும் காற்றலையும் இணைந்து தாலாட்டும் கடல் வளமும் கலைவளமும் செழித்தோங்கி நிற்கும் அழகிய கிராமம் தான் நாவாந்துறை. இவ்வூரின் சிறப்பு அதன் மத்தியில் கம்பீரமாய் அழகுடன் எழுந்து நிற்கும் புனித நீக்கிலார் ஆலயம் தான்.

ஏழை, எளியோரின்துயர் தீர்க்கும் தந்தையாக ஆண்டவரின் அருள்துணையைப் பெற்றுத்தரும் தூயவராக, எமது பாதுகாவலராக விளங்கும் தூய நீக்கிலார் ஒரு உன்னதமான புனிதர். அவர் எமது பாதுகாவலராக கிடைக்கப் பெற்றது எமது பாக்கியமே.

கி.பி.3 ஆம் நூற்றாண்டிலே ஆசியாக் கண்டத்திலே அமைந்துள்ள பத்தார் என்ற நகரிலே எப்பிபாணஸ் யுவான்னா என்ற தம்பதியர் மிகவும் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தனர். பல ஆண்டுகளாக தமக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லாதபடியால் தமக்கு இறைவன் வழங்கிய பெரும் செல்வங்களையும் சொத்துக்களையும் ஏழைகளோடு பகிர்ந்து வாழ்ந்தார்கள். இதனால் இறைவன் இவர்கள் மேல் கருணை கூர்ந்து இவர்களது மன்றாட்டைக் கேட்டருளினார். அவர்களுக்கு இனிமேல் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் எனும் நம்பிக்கை இல்லாத நாளில் இறைவன் அவர்களுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தையை அருளினார். அக்குழந்தைக்கு அவர்கள் நீக்கிலர்ஸ் எனப் பெயரிட்டனர். இப் பெயரின் பொருள் பிரஜையின் வெற்றி என்பதாகும். இவர் தனது பெற்றோரின் செல்வங்களையும் சொத்துக்களையும் ஏழை, எளியவரோடு பகிர்ந்து கொண்டார்.

தியோக்கிளேசியன் பேரரசனால் திருச்சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட வேத கலாபனையின் போது எதிரிகளினால் நாடு கடத்தப்பட்டு பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். இருந்தும் அவற்றையெல்லாம் இறைவனுக்காக மிகுந்த பொறுமையோடு அனுபவித்து ஏற்றுக் கொண்டார்.

தம்மை மிகவும் ஒறுத்து வறியவர்களுக்கு தயாபரராய் விளங்கினார். ஆயரான காலம் முதல் ஒருவேளை உணவு மட்டும் உண்டார். மாமிச ஆகாரத்தை எப்பொழுதும் வெறுத்து வாழ்ந்தார். பாவிகள் மட்டில் இரக்கம் கொண்டவராகவும் தர்மவாளரின் நல்ல நண்பருமாக விளங்கினார். பிரசங்கம் ஆற்றுவதில் மிகுந்த திறமையுடையவராகவும் அக்கினியான வேத வசனங்களால் கேட்பவர் மனங்களை எரித்தருளினார். புனித நீக்கிலார் தூர தேசத்தில் வாழ்ந்த போது அவரது தயவை இரந்து மன்றாடினவர்களுக்கு எண்ணிறைந்த அற்புதங்களினால் உதவினார். கன்னி மரியாளை அதிக பக்தியோடு நேசித்து வாழ்ந்தார். துன்பப்படுபவர்களை தேற்றுவதிலும் நோயாளிகளைக் குணமாக்குவதிலும் வல்லராகவும் காணப்பட்டார்.

புனிதநீக்கிலார் 342 ஆம் நூற்றாண்டு மார்கழி மாதம் 06 ஆம் திகதி இளைஞர்கள் போன்று காட்சியளித்த அநேக தேவ தூதர்கள் புடை சூழ மரணித்தார். அவருடைய சரீரத்திலிருந்து மதுரமுள்ள இரசம் புதுமையாக ஊறியது இன்று வரை இந்த அற்புதம் நடைபெறுவதாக கூறப்படுகின்றது. மேலும் வியாதியால் வருந்தும் பலர் இந்த இரசத்தைப் பருகிக் குணமடைந்துள்ளனர்.

இவர் அற்புதமான புனிதர். இவர் குழந்தைகள், கப்பலோட்டிகள், மீனவர்கள், பொய்க் குற்றம் சாட்டப்பட்டவர்கள், மேலும் திருமணமாகாத இளம்பெண்களுக்கு திருமண வாழ்க்கை அமைத்து கொடுத்து பாதுகாவராகவும் காணப்படுகின்றார். இவர் சன்டாகுளோஸ் (நத்தார் தாத்தா) எனவும் அழைக்கப்படுகின்றார்.

இவர் குழந்தையாய் இருந்த போது தாயிடத்திலே ஒரு நாளைக்கு பலமுறை பாலமுது உண்டாலும் புதன், வெள்ளிக்கிழமைகளில் ஒரு சந்தி பிடித்தால் போல மாலையில் மட்டும் பால் அருந்துவார். இவர் இதனை மரணம் மட்டும் கடைப்பிடித்தார் என வரலாறு கூறுகின்றது. சிறு வயது முதலே மிகுந்த சாதுரியமும் புத்திக் கூர்மையும் உடையவராய் விளங்கினார். இறை விசுவாசத்திலும் அறிவிலும் வளர்ந்தார். செல்வச்செழிப்பான வாழ்க்கையை வெறுத்து தரும நெறியிலே வாழ்ந்தார். கோவிலிலும் தியானத்திலும் பிரசங்கம் கேட்பதிலும் தனது நேரத்தைச் செலவிட்டார்.

கெட்ட தோழர்களாலும் பாவ பலவீனங்களாலும் ஆட்கொள்ளப்படாமல் இருக்க தன்னையே ஒறுத்து வாழ் ந்தார். இளம் வயதிலே இவ ருடைய தாயும் தந்தையும் நோய் வாய்ப்பட்டு இறந்தா ர்கள். அதனால் தனது மாமா வான நீக்கிலாஸ் என்பவரின் பாதுகாப்பிலே வளர்க்கப்பட்டார்.

இப்புனிதருடைய திருவிழா மார்கழி மாதம் 6 ஆம் திகதி கொண்டாடப்பட்டாலும் கால நிலை காரணமாக நாவாந்துறையில் சித்திரை மாதம் 29 ஆம் திகதி பெருவிழாவாக கொண்டாடப்பட்டு புனிதருடைய ஆசீரும் நிறையக் கிடைக்கின்றது.



ர.விதுஷன்
தரம்-9
யாழ். நாவாந்துறை றோ.க.த.க வித்தியாலயம்.

இக் கட்டுரை புனித நீக்கிலாரின் திருவிழாவை முன்னிட்டு பிரசுரமாகின்றது

## ஆலய வரலாறு

மேற்கத்தேய போர்த்துக்கீசர் வியாபார நிமித்தமும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவும் இலங்கைக்கு 1505 இல் வருகை தந்தனர். அவர்கள் தமது வியாபாரத்தை சிறப்பாகச் செய்வதற்கு இறங்கு துறைகள் தேவைப்பட்டன. இவ்வாறு வந்திறங்கிய போர்த்துக்கீசர் தமது பாரிய கப்பல்களில் கொண்டு வந்த நாவாய்கள், மச்சுவாய்கள், தோணிகள் மூலம் ஊர்காவற்றுறையின் கரையோரக் கிராமங்களைஅடைந்துஅங்கு மீன்பிடியிலீடுபட்ட தொழிலாளர்களைக் கொண்டு பரவைக்கடல்களூடாக தமக்கு வசதியான இடங்களுக்குச் சென்றனர். யாழ்ப்பாண குடாப் பகுதியின் மேற்குப் பகுதியில் 'நாவாய்'கள் மூலம் அவர்கள் வந்திறங்கிய துறைதான் நாவாயூர் கிராமமாகும். காலப் போக்கில் நாவாந்துறையாக அழைக்கப்பட்டது. தமது கிறிஸ்தவ மதத்தை இங்கு நிலை நிறுத்த ஊர்காவற்றுறையிலிருந்து கொண்டு வரப்பட்ட கடல் தொழிலாளர்களை மதத்தை அனுசரிக்கச் செய்து அவர்களது மதக் கடமைகளை நிறைவேற்ற கோவில் ஒன்றையும் அமைத்துக் கொடுத்தனர். அவ்வாறு ஓலைக் கொட்டிலாக அமையப் பெற்றதுதான் தூய நீக்கிலார் ஆலயமாகும். பின்னர் செங்கற்கள், முருகைகல், சுண்ணாம்பினால் ஆலயம் கட்டப்பட்டது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிநிலவினாலும் இக்கோவில் சேதமாக்கப்படவில்லை. நாவாந்துறையில் இருந்த கிறிஸ்தவவர்கள் வேறு இடங் களில் தஞ்சம் புகுந்து இருந்து விட்டு மீண்டும் வந்து கோவில் பராமரிப்பு வேலைகளை தொடங்கினர். பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து வந்த வெள்ளைக்கார குருமார் மேலும் மேலும் மதத்தை வளர்ப்பதிலும் ஊரின் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டனர். இவ்வாறு பராமரிக்கப்பட்டு வந்த தூய நீக்கிலார் ஆலயம் இருநூறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் பழைய செங்கற்களால் கட்டப்பட்டிருந்த கோவில் காலத்தின் தேவை அறிந்து புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஊர் மக்களின் பங்களிப்புடனும் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாட்டு அன்பர்கள் நிதி அன்பளிப்புடனும் பங்குத் தந்தையரின் அனுசரணையுடனும் புதியதாக ஆலயம் மீளமைக்கப்பட்டது. 20.08.2011 இல் அதிமேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் அபிஷேகம் செய்து கோவில் திறக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



மரிசலீன் மரியதாஸ்
நாவாந்துறை.

# இலங்கையில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி மீனவர் சங்கம் போராட்டம்

**(கொழும்பு)**

**இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 21 மீனவர்களை விடுவிக்கக் கோரி மிகப் பெரிய போராட்டங்கள் நடத்தப் போவதாக பாம்பன் நாட்டுப்படகு மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.**

மன்னார் வளைகுடா கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 21 மீனவர்களையும் அவர்களது மூன்று நாட்டுப் படகுகளையும் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் 16 வயது சிறுவன் என்பதால் அவர் மட்டும் அன்னை இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பாம்பன் நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் ஜி.அருள் தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில், பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும் சிறைபிடித்துச்செல்வதும் தொடர்வதால் மீன்பிடிக்க முடியாத நிலை உள்ளது பற்றி மீனவர்கள் வேதனை தெரிவித்தனர்.

ஆகையால் தீவுப் பகுதியிலுள்ள மீனவ கிராமங்களையும் ஒன்றிணைத்து மிகப்பெரிய போராட்டங்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. (இ)

## மேல்நீதிமன்ற நீதிபதி வீட்டில் திருட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் பணி நிறுத்தம்

களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதியின் வதிவிடத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பாதுகாப்பு கடமையில் இருந்த போது இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறையிலுள்ள நீதிபதியின்வதிவிடத்தில் தனது பாதுகாப்புக்கடமையைச்சரிவரச்செய்யாத பொலிஸ் கான் ஸ் டபிள் பாணந்துறைபொலிஸ் பொறுப்பதிகாரியினால் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வீட்டின் பிரதான வாயிற்கதவருகில் கான்ஸ்டபிள் பாதுகாப்பு கடமையில் இருந்தபோது வீட்டினுள் நுழைந்த திருடன் பணம் உட்பட 3 இலட்சம் ரூபாபெறுமதியானதங்கநகைகளைத்திருடிச்சென்றுள்ளான்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மூத்த பொலிஸ் அதிகாரிஒருவர், சம்பவம் தொடர்பாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (3)

# தேரரின் தாக்குதலுக்குள்ளான மாணவி வைத்தியசாலையில்

பட்டதாரி ஆசிரியரான தேரரின் தாக்குதலுக்கு உள்ளான க.பொ.த. உயர்தர மாணவி (வயது 18) ஒருவர், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய தேரரரை அலவத்து கொடை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

அலவத்துகொடைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பாடசாலையொன்றிலே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி மாணவி தேரருக்கு குறுஞ்செய்திகளை அனுப்பி வந்ததாகவும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென தேரர் மாணவிக்கு, பலமுறை எடுத்துக் கூறிய போதிலும் அம்மாணவி தொடர்ந்து அச் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்ததாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், தேரர் மாணவியையும் அவரது தாயையும் விஹாரைக்கு அழைத்து அறிவுரைகள் கூறியபோது ஏற்பட்ட வாய்த்தர்கத்தின்போது மாணவியை தேரர் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தேரரின் சகோதரியும் அருகில் இருந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-28.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.53 | 147.35 |
| பிரிட்டன் | பவுண்ட் | 208.09 | 215.47 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.70 | 168.16 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 146.97 | 153.11 |
| கனடா | டொலர் | 113.33 | 118.05 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 108.04 | 113.11 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.15 | 110.22 |
| இந்தியா | ரூபா | 2.1665 | ------- |
| சீனா | யுவான் | 22.1328 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 476.7584 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5178 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3698 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 40 | 60 | 40 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 | 80 | 60 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 50 | 80 | 70 | 80 | 80 |
| தக்காளி | 100 | 100 | 90 | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 45 | 50 | 50 | 80 | 50 |
| கோவா | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 60 |
| கரட் | 80 | 100 | 80 | 80 | 90 | 120 | 70 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 30 | 60 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 35 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 40 | 100 | 50 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | - | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 50 | 80 | 70 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 140 | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 80 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 60 | 100 | 30 | 100 | 100 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 | 300 | 300 | 200 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 160 | 120 | — | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 35 | 50 | — | 60 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 500 | 300 | 400 | 400 | 200 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-20 | 50 | 40 | 30-35 | 40 |
| இராசவள்ளி | 150 | 250 | 100 | 160 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளாங்கி | 80 | 100 | 40 | 60 | 40 | 120 | — |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சந்திரிகா– பிரபாகரன் கடிதப் பரிமாற்றம் 168

பல ஆண்டுகளாக விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்துப் பொலிஸாரையும் விடுவிப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தையும் நாம் பாராட்டுவதுடன் இதனை ஒரு நல்லெண்ணம் மற்றும் வடக்கு கிழக்குப் பிரச்சினைகளில் தீர்வு காண பேச்சுவார்த்தைக்குரிய தங்கள் சாதகமான உள் எண்ணத்தில் வெளிப்படுத்துகை என்பவற்றுக்கான அடையாளமாகவும் கருதுகிறோம்.

சமாதானப் பேச்சுக்குத் தயார் என்ற தங்களது கூற்றை நாம் மிகவும் ஆர்வத்துடன் அவதானித்துள்ளோம். இவ்விடயம் குறித்து மேலும் விரிவாக ஆராய நாம் விரும்புகிறோம்.

என்னால் பெயர் குறிப்பிடப்படுபவர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துத் தங்களது பிரதிகளை பெயர் குறிப்பிடுமாறு நாம் ஆலோசனை விடுக்கிறோம்.

எந்தெந்தப் பொருட்களுக்கான தடை அகற்றப்பட்டுள்ளதோ அவை எவ்வித தாமதமும் இன்றி யாழ்ப்பாண மக்களைச் சென்றடைவதை நாம் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

பொருட்களை நேரடியாகக் கொண்டு சென்று இறக்குவதற்கு எமக்குப் பருத்தித்துறை இறங்கு துறை மட்டுமே இருப்பதால் இவ் விடயத்தில் சிரமங்கள் இருப்பதை காண்கின்றோம்.

இப் பொருட்களை யாழ்ப்பாண மக்களுக்கு தாமதமின்றி அனுப்பி வைப்பதற்குரிய வழி வகைகளைத்திட்டமிட விரும்புகிறோம்.

அத்துடன் சிவில் வாழ்க்கையை மேலும் இயல்பானதாக்கும் வகையில் இயலுமானவரை மின்சாரத் தொடர்பை மீண்டும் ஏற்படுத்தவும் பிரதான நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒரு பகுதி என்பவற்றை திருத்தி அமைக்கவும் எமது அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமாதானம் மற்றும் வடகிலும் கிழக்கிலும் இயல்பு நிலையை மீள ஏற்படுத்தல் என்பவற்றை நோக்கிய எமது அரசாங்கத்தின் முயற்சிகளில் தாங்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருவதை நாம் வரவேற்கின்றோம்.

எனவே மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித்திட்டங்களில் உள்ள திருத்த வேலைகளைக் கையாளவிருக்கும் எமது தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அனைத்து ஒத்துழைப்பையும் தாங்கள் வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

என்னால் பெயர் குறிப்பிடப்படும் நபர்களுக்கும் தங்கள் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற வேண்டுமென நான் ஆலோசித்துள்ள கலந்துரையாடல்கள் மூலம் இச் செயற்பாடுகளின் வகை மாதிரிகளைத். திட்டமிடலாம் என் நான் நினைக்கிறேன்.

நன்றி.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

பேச்சு நடத்த பிரதிநிதிகள்

இதற்கு பிரபாகரன் பதில் கடிதம் அனுப்பினார். அதில் அவர் கூறியிருந்ததாவது,

அன்புள்ள பிரதம அமைச்சருக்கு,

தங்களது கடிதத்தைப் பெற்றுக் கொள்வதில் மகிழ்சியடைகின்றோம். எமது தடுப்புக் காவலில் இருந்த பத்துப் பொலிஸாரை விடுவித்ததன் மூலம் காட்டப்பட்ட எமது நல்லெண்ண வெளிப்பாட்டைத் தாங்கள் வரவேற்றிருப்பதை அறிவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எப் பொருட்களுக்குப் பொருளாதார தடை நீக்கப்பட்டதோ அவை தாமதமின்றி யாழ்ப்பாணத்து மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் தங்களுக்கிருக்கும் உண்மையான கருசனத்தை நாம் பாராட்டுகின்றோம்.

இந்த விடயம் குறித்து பரஸ்பர அக்கறையை நாம் பகிர்ந்து கொள்வதுடன் இந்த அவசரப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான வழி வகைகளை கண்டறியும் தங்களது முயற்சியில் தங்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவோம்.

மின்சாரத்தை மீள வழங்குதல் நெடுஞ்சாலை களைத் திருத்துதல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களைப் புதுப்பித்தல் என்பவற்றிற்கான தங்கள் அரசாங்கத்தின் தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம்.

திருத்த வேலைகளில் ஈடுபடவிருக்கும் அரசாங்கத்தின் தொழிநுட்ப அலுவலர்களுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தனது முழுமையான ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கும் என்பதை நாம் தங்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். சமாதானப் பேச்சுக்கென நாம் விடுத்த அழைப்புக்கான தங்களது அனுகூலமான பதிலை நாம் பாராட்டுகின்றோம்.

முதல் நிலைக் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு எமது பிரதிநிதிகளை நியமிக்கு மாறு தாங்கள் ஆலோசனை வழங்கியுள்ளீர்கள்.





(தொடரும்)

# அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஐ.நா.விசாரணை செய்ய வேண்டும்

## நாமல் எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

**இலங்கைக்கு வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகள் தொடர்பான இரண்டு நிபுணர், கடந்த ஒரு வருட காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பழிவாங்கப்படுவது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் டுவிட்டரில் செய்தி ஒன்றை பிரசுரித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் நிபுணர்கள் விடுதலைப் புலிகளின் கடந்த கால நடவடிக்கைகளையும் கடந்த ஒரு வருடத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பழிவாங்கல்களையும் கவனத்தில்கொள்ள வேண்டும் எனறு அவர் கோரியுள்ளார். (இ)

# இது நல்லாட்சியா?

(கொழும்பு)

தினமும் ஒருவர் இருவர் என வடகிழக்கு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதும் கடத்திச்செல்லப்பட்டு விசாரிப்பதும் நல்லாட்சியா? என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியகூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி செயலாளர் சிவகரனை மன்னாரில் அவரின் இல்லத்தில் வைத்து இராணுவ புலனாய்வாளர்கள் கைது செய்தமை தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருத்து தெரிவிக்கையில், முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்ற போராளிகள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சாதாரணமான அப்பாவி இளைஞர்கள் என தினமும் கைதுசெய்யப்படுவதும் தடுத்து வைப்பதும் என்றுமில்லாத வகையில் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீண்டும் மக்கள் மத்தியில் அச்ச சூழல் தோன்றியுள்ளது. எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் இந்த நாட்டில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை தற்போது கிளிநொச்சி விஜயத்திற்குப்பின் ஏற்பட்டுள்ளது தமிழர் எதிர்க்கட்சி தலைவராக இருப்பதை பொறுத்துக் கொள்ளாத இனவாதிகள் சம்பந்தன் மீது அவதூறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை நல்லாட்சி அரசு முற்றுப் புள்ளி வைக்க தவறியுள்ளது.

மொத்தத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த்தலைமைக்கும் பாதுகாப்பில்லை. தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பில்லை என்ற நிலையே இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் காண முடிகிறது.

எனவே உடனடியாக கைது செய்யப்புட்ட தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்வதோடு இனியும் தமிழ் இளைஞர்கள் கைது செய்வதும் கடத்தப்படுவதும் தொடர்கதையாவதை நிறுத்த வேண்டும் எனவும் அரியநேத்திரன் மேலும் தெரிவித்தார். (இ)



# ஆசிரியர் நியமனங்களைப்பெற்று கடமைக்குச் செல்லாதோருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படாது

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட ஆசிரியர் நியமனங்களை பெற்று கடமைக்கு செல்லாதோருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படமாட்டாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கான நான்காம் கட்ட நியமனமாக 455 பேருக்கு நேற்று முன்தினம் நியமனங்கள்வழங்கப்பட்டன.

கொழும்பில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், பல பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இந்த நியமனம் வழங்கப்படுகின்றது. இந்த நியமனம் வழங்கப்படும் வரை பலரும் என்னிடம் பல்வேறுவிதமான கேள்விகளை கேட்டனர். ஆனால் நான் அவர்கள் அனைவருக்கும் மிகவும் பொறுமையாக பதிலளித்தேன்.

நூறு நாட்கள்வேலைத்திட்டத்தில் அனைத்தையும் கொடுத்து முடித்துவிட வேண்டும் என்று சிந்தித்தோம்.ஆனால் அதனை செய்ய முடியவில்லை. நான் அமைச்சு பதவியை கூட விட்டு விட்டு செல்லவும் தீர்மானித்தேன். அப்படி பல போராட்டங்களுக்கு மத்தியில் இந்த நியமனம் வழங்கப்படுகின்றது.எனவே இதனை தயவு செய்து பொறுப்புடன் பாரமெடுங்கள். ஆசிரியர்களுக்கான சம்பளத்தை இன்னும்10 ஆயிரம்ரூபாவால்அதிகரிக்க அமைச்சரிடம் பேசியுள்ளேன்.அவரும் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்று வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

ஒரு சிலர் இந்த தொகை போதாது என தொழிலை விட்டுவிட்டு செல்கின்றனர். ஆனால்10ஆயிரம்ரூபாஅதிகரிக்கப்பட்டும்மீண்டும்தொழிலில் இணையமுடியாது. இதற்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டேன். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஜனசவிய ஆசிரியர்களை உள்வாங்கிய பொழுது மாதாந்தம் ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டது.

ஆனால் அவர்கள் இன்று நல்ல சம்பளங்களைப்பெறுகின்றனர். எனவே எதனையும்உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாது. பொறுமையுடன் இருந்தால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். வெற்றியை நோக்கி நாம் போராட வேண்டும் மத்திய அரசாங்கத்தின் ஊடா கவே இந்த நியமனாங்கள் வழங்கப்படுகின்றன. (இ)

# டுபாயில் தங்க நகைகளைத் திருடியதாக இலங்கைப் பணிப்பெண் மீது முறைப்பாடு

டுபாயில் பணியாற்றிய இலங்கை பணிப்பெண் ஒருவர், தங்க நகைகளை திருடிய பின்னர், இலங்கைக்கு சென்றுவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டுபாயின் பொதுமகன் ஒருவர் இந்த முறைப்பாட்டை டுபாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இதன்படி தாம் வெளிநாடு ஒன்றுக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றிருந்த போது குறித்த இலங்கை பணிப் பெண், தமது 40 ஆயிரம் திர்ஹாம் பெறுமதியான தங்க நகைகளை திருடிச் சென்று விட்டதாக தெரிவித்துள்ளார்.

பணிப்பெண் வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றுவிட்டமையை தமது மகன் தமக்கு அறியத் தந்ததாகவும் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### நீங்களே பேசிக் கொண்டிருக்கிறீர்களா?

உங்களை எல்லோரும் விரும்ப வேண்டுமானால் மற்றவர்கள் பேசுவதை நீங்கள் அக்கறையோடும் அனுதாபத்தோடும் உணர்ச்சிபூர்வமாகவும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அதை விட்டு விட்டு நாம் பேசுவதையே மற்ற எல்லோரும் கேட்க வேண்டும் என லொடலொட வென்று பேசிக் கொண்டே இருந்தால் உங்களைப் பர்த்ததும் சரியான அறுவை வருகிறது என்று அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள்.

ஒருவரிடம் எவ்வளவோ கவலைகள் இருக்கலாம். உங்களிடம் மற்றவர்களுக்குச் சொல்வதற்கென்று எவ்வளவோ விடயங்கள் இருக்கலாம். சொந்தப் பிரஸ்தாபங்கள் இருக்கலாம்.அதற்காக அவற்றையெல்லாம் ஆளைத் தேடித் தேடிப் பிடித்து அறுக்க வேண்டும் என்பதில்லை.

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார்.இவரிடம் ஏதேனும் ஒரு சொல்லைச் சொன்னால் போதும். அதற்குத் தயாராக ஒரு கதை வைத்திருப்பார்.இவரைக் கண்டாலே எனக்கு அலர்ஜி.

சிலர் முன்பின் தெரியாதவர்களிடமெல்லாம் வளவளவென்று பேசிக் கொண்டிருப்பார்கள்.

மற்றவர்கள் தங்கள் முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொண்டாலும் கூடச் சிலர் பேசிக் கொண்டே இருப்பார்கள். சிலர் ஏதோ வேலைகளைச் செய்து கொண்டோ வேறு திசையில் கவனத்தைத் திருப்பிக் கொண்டோ மற்றவர் இருந்தாலும் இவர்கள் விடமாட்டார்கள். இவையெல்லாம் நம் பேச்சை அவர்கள் கேட்க சற்றும் ஆர்வம் காட்ட விரும்பவில்லை என்று பொருள். அதற்குப் பிறகும் பேசிக் கொண்டிருக்கலாமா?

நாம் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர்கள் வேறு வேலையில் இறங்கினால் உடனே சட்டென்று நாம் பேசுவதை நிறுத்தி விட வேண்டும். அவர்கள் மீண்டும் தொடர்ந்து சொல்லுங்கள் என்று சொல்லும் வரை சும்மா இருந்து விட வேண்டும். கற் சுவருக்கு எதிரே நின்று கொண்டு கத்துவதற்கும் இவர்களிடம் எதையேனும் சொல்லுவதற்கும் ஒரு வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

நாம் பேசுபவை மற்றவர்களுக்குத் தெரிய வேண்டிய விடயங்கள்தானா?நாம் பேசும் விடயங்களுக்கும் அவர்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? நாம் பேசுபவற்றைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று என்ன கட்டாயம்?நாம் பேசும் விடயங்கள் சுவாரஸ்யமானதாக இருக்கின்றனவா?நாம் பேசுபவை நம்மையோ நம்மைச் சார்ந்தவர்களையோ பாதிக்காமல் இருக்குமா? நேரமும் சந்தர்ப்பங்களும் நம்மைப் பேச அனுமதிக்கின்றனவா?வரம்புக்கு உட்பட்டுப் பேசுகிறோமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் முறையான பதில்களைச் சிந்தித்த பின்பே பேச வேண்டும்.

நாம் பேசுவதை குறைக்க வேண்டியது முதல் முயற்சி. அதற்குப் பிறகு மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொள்ளக் கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்வது இரண்டாவது முயற்சி.

பேசுபவர்கள் எதிராளிக்கும் வாய்ப்புத் தர வேண்டும். சற்று விபரமாகச் சொல்ல வேண்டுமானால் இருவரும் அதில் சமமான நேரத்தைப் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும்.அல்லது சற்று முன்பின் இருக்கலாம்.அதை விட்டு விட்டு ஒருவரே முக்கால் மணி நேரம் பேசிக் கொண்டிருந்தால் அது பேசிக் கொண்டிருப்பவருக்கு அழகல்ல, நல்லதுமல்ல.

என்னால் பேச்சையெல்லாம் குறைக்க முடியாது. வேறு வழி எதுவும் இருந்தால் சொல்லுங்கள் என்று வாதிடுபவர்களுக்கு ஒரு வார்த்தை.

அப்படிப் பேச்சு என்பது உங்களால் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக ஆகிவிட்டால் உங்களைப் பற்றியும் ஊர்ப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுவதைத் தவிர்த்து எதிரே உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா?

அவரைப் பற்றி -அவருடன் தொடர்புடையனவற்றைப் பற்றி மட்டுமே பேசுங்களேன்!

கொஞ்சமாவது பலன் இருக்கும்!

**லேனா தமிழ்வாணன்**




# வரதட்சணை!

..நீளமான தலைமுடியும், அரிவாள் மீசையும் கொண்ட அவரைப் பார்ப்பதற்கு நாடக வேடதாரி போல் இருந்தாலும், மாப்பிள்ளையின் பெரியப்பா என்பதால் அவரை வரவேற்ற கமலாவின் தந்தை, தன் மகளை அறிமுகப்படுத்தினார்.

பிறகு அந்த அரிவாள் மீசைக காரர் நேராக மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு சென்று ரவியின் தந்தையை சந்தித்து, "நான் கமலாவின் மாமா! மாப்பிள்ளையைச் சிறிது பார்க்கலாமா?" என்றதும், ரவியின் அப்பாவும் தன் பிள்ளையை அறிமுகப் படுத்தினார்.



முகூர்த்த நேரம் நெருங்கியதும் அப்போது திடீரென ரவியின் தந்தையைத் தனியே அழைத்த மீசைக்காரர், "உங்களிடம் வரதட்சிணையைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கிசுகிசுக்க, ரவியின் தந்தை அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

"உங்களிடம் வரதட்சிணைப் பணத்தை..." என்று தொடங்கிய அந்த மீசைக்காரர் திடீரென பயங்கரமாக இருமத் தொடங்கினார். "தண்ணீர்... தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று திணறிக்கொண்டே அவர் கூற, ரவியின் தந்தை தண்ணீர் எடுத்து வர வெளியேறினார்.

தண்ணீர் எடுத்து வந்ததும், அதை அருந்திய மீசைக்காரர், "உங்களிடம் இப்போதே வரதட்சிணைப் பணத்தைத் தந்துவிடலாமா என்று என் மைத்துனன் கேட்டான்" என்று சொல்ல, ரவியின் தந்தை சம்மதித்தார்.

உடனே, கமலாவின் தந்தையிடம் சென்ற மீசைக்காரர், "உங்களிடம் ரகசியமாகப் பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?" என்று கேட்க, இருவரும் அறைக்குள் நுழைந்தனர். சற்று நேரத்தில் அவர் வெளியே வந்து தண்ணீர் எடுத்துப் போனார். அதன்பின சிறிது நேரத்தில் மீசைக்காரர் வெளியே வந்தார்.

இது நடந்து சில நிமிடங்களுக்குப் பிறகு, கமலாவின் தந்தை "ஐயோ! ஐயோ!" என்று அலறிக் கொண்டே தன் அறையிலிருந்து ஓடி வந்தார். "வரதட்சிணைக்காக வைத்திருந்த பணம் பத்தாயிரத்தையும் காணவில்லை. அந்த மீசைக்காரர் என்னை தண்ணீர் கொண்டு வரச் சொல்லி வெளியே அனுப்பி விட்டு, பெட்டியில் இருந்த பணத்தைத் திருடி விட்டார்!" என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு புலம்பினார்.

அதேசமயம், ரவியின் தந்தையும் கூச்சலிட்டபடி ஓடி வந்து "எங்கே அந்த மீசைக்காரர்? என் பெட்டியிலருந்து ஐயாயிரம் ரூபாயைத் திருடி விட்டார்!" என்று கூவினார். இரு வீட்டுக்காரர்களும் மீசைக்காரரைத் தேட, அவரைக் காணவில்லை. அப்போதுதான் அவர் பணம் திருடுவதற்காக நாடகமாடியிருக்கிறார் என்பது புலனாகியது. **(தொடரும்)**




- 1672 - பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.
- 1770 - ஜேம்ஸ் குக் ஆஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் வீழ்ந்தது.
- 1882 - பெர்லின் நகரில் எலெக்ட்ரோமோட் எனபடும் பேருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஓட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவம் நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின பல பகுதிகளிலும் உணவுப்பொதிகளை விமானத்திலிருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான் படையினர் ஆரம்பித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரௌன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பெர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30இல் தற்கொலை புரிந்து கொண்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாககவ் என்ற இடத்தில் இருந்த வதை முகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தனர்.
- 1946 - ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்.
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட் கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.
- 1975 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.
- 1986 - லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தப்பிடித்ததில் 400,000 நூல்கள் அழிந்தன.
- 1991 - வங்காள தேசத்தில், சிட்டாகொங்கில் இடம்பெற்ற சூறாவளியில் 138,000 பேர் வரையல் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடு களை இழந்தனர்.
- 2005 - 29 ஆண்டு கால முற்றுகையின் பின்னர லெபனானிலருந்து சிரியா முற்றாக வெளியேறியது.

**பிறப்புகள்**

- 1818 - இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன (இ. 1881)
- 1848 - ரவி வர்மா, இந்திய ஓவியர் (இ. 1906)
- 1891 - பாரதிதாசன், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் (இ. 1964)
- 1938 - திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ. 2010)
- 1957 - மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி
- 1970 - அன்ட்ரே அகாசி, முன்னணி டென்னிஸ் ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- 1843 - வின்சென்ட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்.
- 1980 - ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைபட இயக்குனர (பி. 1899)

**ரவி வர்மா, இந்திய ஓவியர்**



ராஜா ரவிவர்மா கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கிளிமானூர் எனும் ஊரில் 1848 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலிருந்தே சமஸ்கிருதம், மலையாளம் ஆகியவற்றுடன் ஓவியத்தையும் தம்முடைய உறவினர் ராஜா ராஜவர்மா விடமிருந்து கற்றுக்கொண்டார்.

இவர் திருவாங்கூர் மன்னர் ஆயில்யம் திருநாள் மகாராஜாவின் உதவியுடன் 1862 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் அரண்மனையில் எண்ணெய் வண்ண ஓவியக்கலையை அரண்மனை ஓவியர் ராமசாமி நாயுடு விடம் ஒன்பது ஆண்டுகள் பயின்றார். அவ்வேளையில் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டார்.

தியோடோர் ஜென்சன் என்னும் ஐரோப்பியர் 1868 இல் அரண்மனை வந்திருந்தபோது அவர் ஓவியம் வரையும் முறையையும் உத்திகளையும் அருகில் இருந்து கவனித்து அதன் மூலம் தாமும் அந்த ஐரோப்பியக் கலையைக் கற்றுக்கொண்டார். அயில்யம் திருநாள் மகாராஜா, ரவிவர்மா தம்மை மிகச் சிறப்பாக வரைந்ததற்காக வீரஸ்ருங்கலா என்னும் உயரிய விருதை அளித்தார்.

1894 ஆம் ஆண்டு மும்பையில் தமது அச்சகத்தை நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதி ஓவியம் தமயந்தி அன்னப் பட்சியுடன் உரையாடும் ஓவியம் அச்சிடப்பட்டது. நவம்பர் 24, 2002 இல் டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் இவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

உலகப் புகழ்பெற்றவர்களின் ஓவியங்களை வரைந்த இவர், 1906 இல் தமது 58 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

# ஆட்சியை கவிழ்க்கும் கனவு நனவாகாது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)



**நல்லாட்சிக்கான தேசிய அரசாங்கத்தினைக் கவிழ்க்கும் மாற்றுச் சக்திகளின் கனவு, ஒருபோதும் நனவாகாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும் ஊடகங்களின் பிரதானிகளையும் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை சந்தித்து நல்லாட்சி அரசாங்கத்தின் போக்குப் பற்றி விளக்கமளித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டம் சேர்ப்பதென்பது தங்களின் இயலாமையை மறைப்பதற்காகவே. ஹைட் பார்க் கூட்டத்தின்போது, முன்னாள் ஜனாதிபதி பேசியது வேடிக்கையானது. 'இந்தக் கூட்டத்தினைப் பாருங்கள். இங்கு வந்திருக்கின்ற கூட்டத்தினை சட்டத்துறை கவனிக்க வேண்டும்' என்ற தொனியில் அவர் பேசியிருந்தார். அதாவது, என் பக்கமும் மக்கள் இருக்கிறார்கள் என்ற எச்சரிக்கையை நீதித்துறைக்கும் காவல்துறைக்கும் காட்டுவதற்காகவே இவ்வாறான கூட்டங்களைக் கூட்டுகிறார்கள். தங்களுடைய செல்வாக்குக் குறைகின்றபோது, பணத்துக்காக வரவழைக்கப்பட்டவர்களைக கொண்டு தமது செல்வாக்கை நிரூபிக்கப் பார்க்கிறார்கள். இது, தமது அதிருப்தியாளர்களைத் திருப்திப்படுத்தும் செயலேயன்றி வேறொன்றுமில்லை' எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (இ)

## பொறியியல்துறை நிறுவனம் SLEIக்கு எதிராக பேராதனை மாணவர்கள் எதிர்ப்பு ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பு

இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பொறியியல் துறைப் பட்டப்படிப்புக்கான தற்கை நெறிகள் பயிற்றுவிக்கப்படுவதற்கு எதிராகப் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் கையொப்பமிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.


இது தொடர்பாக பொறியியல் துறை தலைவர் கவீன் சாமட் தெரிவிக்கையில், இலங்கைப் பொறியியல் நிறுவனம் பொறியியல் துறை பட்டதாரிகளை அவர்களது சான்றிதழ்களை பரிசீலனை செய்து பதிவுகளை மட்டும் செய்யும் ஒரு நிறுவனமாகும். இந் நிறுவனம் பொறியியல் துறை கற்கை நெறிகளுக்கு கட்டணம் அறவிட்டு வகுப்புக்களை நடத்தி வருகிறது. மாணவர் ஒன்றியத்தின் காப்பாளர் சதுர சின்தக பண்டார தெரிவிக்கையில், இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தராதரமற்ற பட்டச் சான்றிதழ் வழங்கும் செற்பாடாக அமைவதாகவே இருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண்பார் என தாம் நம்புவதாகவும் இல்லாவிடில் ஆயிரக்கணக்கான அரச பல்கலைக்கழக பொறியியல் துறை மாணவர்களை அது பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 705

Search for people, places and things Nagendram Home


சந்துரு




அனு அனுஜன்




சிந்து




நிஷாந்தன்



உஷாந்தன் நெய்மார்




சர்மி சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017



ஓகஸ்ட் 2 இற்கு மேல் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும்! மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாமல் பேசும் மீன இராசி நேயர்களே!

மன்மத வருடம் முடிந்து துரமுகி வருடம் தொடங்கியிருக்கின்றது. அடியெடுதது வைத்திருக்கும் புத்தாண்டு படிப்படியாக முனனேற்றத்தைக் கொடுக்குமா? பண நெருக்கடி அகலுமா? சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வருமா? வியாபார விருத்திக்கு வழி வகுத்துக் கொடுக்குமா? ஆரோக்கியத் தொல்லைகள் அகலுமா? எனறெல்லாம் வருடம் பிறகும் முன்னாலே மனதில் எண்ணங்கள் பிறந்துவிடும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம் திகதி மாலையிலேயே நிகழ்கின்றது.

புதன்கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்திருக்கின்றது. புதன் உங்கள் ராசியைப் பொறுத்தவரை 4, 7-க்கு அதிபதியாவார். திருவாதிரைக்குரிய கிரகம் ராகுவாகும். அந்த ராகு உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்தில் குருவோடு கூடி ஆண்டின் தொடக்க நாளில் சஞ்சரிக்கின்றார். மறைந்த ராகு நிறைந்த தனலாபத்தை தரும்.

1, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் ஆவார். அவர் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது நன்மைகளையும் வழங்க இயலும். எனவே அவர் கடன் சுமை குறைய வழிகாட்டுவார். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது.

வருடத் தொடக்கத்தில் 12 இல் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல. கூடுதல் விரயங்களை அது கொடுக்கலாம். சுபவிரயங்களைச் செய்யாமல் இருந்தால் வீண் விரயங்களுக்கு ஆளாக நேரிடும்.

வருடத் தொடக்கத்தில் சூரியனும், புதனும் 2 இல் இணைந்திருக்கிறார்கள். இந்த புத ஆதித்ய யோகம் ஒரு பொன்னான யோகமாகும். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்பட்டு பழைய வேலைக்கே திரும்பச் செல்வர்.

6-க்குஅதிபதி சூரியன், 7-க்கு அதிபதி புதனோடு இணைந்து சஞ்சரிக்கும்பொழுது வாழ்க்கைத் துணையால் வருமானம் வர வேண்டும் அல்லவா? எனவே தம்பதியர் இருவருமே வேலைக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்துவிடும்.

செவ்வாய், சனி சேர்க்கை ஒன்றுதான் முரண்பாடான கிரக சேர்க்கையாகும். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் தனஸ்தானம், தகப்பனார் ஸ்தானம் ஆகியவற்றிற்கு அதிபதியானவர். அவரோடு இலாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானம் ஆகியவற்றிற்கு அதிபதியான சனிபகவான் இணைகின்றார்.

எனவே திடீர், திடீரென தன விரயங்கள் ஏற்படலாம். திட்டமிடாது வரும் விரயங்களைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். அதுமட்டுமல்லாமல் நீண்ட தூரப் பயணங்களும், உத்தியோகத்தில் திடீர் மாற்றங்களும் வருடத்தொடக்கத்திலேயே ஏற்படலாம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி பதினேழு வரை!**

வருடத் தொடக்கத்தில் எதிர்ப்பு, வியாதி, கடன் என்பதைப் பற்றி எடுத்துரைக்கும் இடத்தில் உங்களது ராசிநாதன் குரு சஞ்சரிக்கின்றார். எனவே எதிரிகள் விலகுவர். உதிரி வருமானங்கள் வந்து சேரும். காலை முதல் மாலை வரை பயணித்துக் கொண்டே இருப்பீர்கள். கார், வண்டி போன்ற வாகனங்கள் வைத்திருப்பவர்கள் பழுதுச்செலவால் அவதிப்படுவர். எனவே ஆண்டின் தொடக்கத்தில் பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்குவது உத்தமம்.

வெளிநாட்டில் வசிப்பவர்கள் குருவின் வக்ர காலத்தில் தாய்நாடு திரும்பும் சூழ்நிலை அமையலாம். நல்ல வேலை போய் விட்டதே என்று கவலைப்பட வேண்டாம். வக்ர குரு உங்களுக்குப் புதிய உத்தியோகத்தை உடனடியாக வழங்க முன்வருவார். சந்திரபலம் நன்றாக இருப்பதால் பெற்றோர் வழி ஆதரவு கூடும். குறிப்பாக தாய் வழி ஒத்துழைப்பும், தனலாபமும் கிடைக்கலாம். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொண்டால் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க இயலும்.

தகப்பனார் ஸ்தானத்தில் செவ்வாய், சனி சேர்க்கை பெறுவதால் தந்தையின் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

6 இல் ராகுவும், 12 இல் கேதுவும் சஞ்சரிப்பதால் சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் சற்று மேலோங்கி இருப்பதால் ராகு-கேதுக்களுக்குரிய பரிகாரங்களை முறைப்படி செய்து கொள்வது நல்லது.




**ஆடி 18 இல் தேடி வரும் யோகம்!**

துரமுகி வருடம் ஆடி மாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்தக் குருப்பெயர்ச்சி உங்களைக் குதூகலத்தில் ஆழ்த்தப் போகின்றது. சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டவும், இனிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவும், குருவின் சஞ்சாரம் நன்றாக இருக்கின்றது.

குரு கன்னி ராசியில் சஞ்சரித்து தன் வீட்டைத் தானே பார்ப்பதால் பொன்னும், பொருளும், போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள்.

வருமானம் திருப்தி தரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பூமி யோகம், முதல் பொன்னான யோகங்கள் அனைத்தும் வந்து சேரும் நேரமிது. சாமி துணையும், சார்ந்தவர்களால் நன்மையும் ஏற்படும். சேமிப்பு அதிகரிக்கும். திடீர் திடீர் என வரும் செலவுகளை சமாளிக்கும் ஆற்றலும் பிறக்கும். எத்தனை பார்வைகள் இருந்தாலும் குருவின் பார்வைக்கு என்று ஒரு தனி மதிப்பு உண்டு.

சப்தம ஸ்தானத்திலிருந்து குரு பார்க்கும பொழுது இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும், மழலையின் ஓசை கேட்கவும் வழி பிறக்கும். அஞ்சல்வழி அனுகூலம் கிடைக்கும். ஆச்சரியப்படத்தக்க தகவல்களும், அந்நிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகளும் உங்களைத் திக்குமுக்காட வைக்கும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. திறமை பளிச்சிடும் நேரமிது. திடீர் பொறுப்புகளும் பதவிகளும் கூட ஒருசிலருக்கு கிடைக்கலாம்.

7 இல் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிர்காலம் இனிமையாக அமையும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். வருமானம் திருப்தி தரும். வந்திடும் பகை விலகும். திருமண முயற்சிகளில் வெற்றி கிட்டும். திருவருள் வழங்கும் குருவைத் தினந்தோறும் வழிபட்டால் பெருமைகள் அனைத்தும் வந்து சேரும்.

குருவின் பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. அதன் பார்வை பதியும் இடங்கள் புனிதமடைவதால் உடல் ஆரோக்கியம் சீராகும். இதுவரை வாடிக்கையாக இருந்த மருத்துவச்செலவுகள் இனி குறையும். எதிர்பாராத தனவரவால் இதயம் மகிழ்வீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும்.

"ஜென்மத்தை குருதான் பார்த்தால் சிரமங்கள் அகன்று ஓடும்" என்பர். தொட்டதைத் துலங்க வைப்பவர் குருபகவான். எனவே மூடிக்கிடந்த தொழிலுக்கு இனி திறப்புவிழா நடத்திப் பார்ப்பீர்கள். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க வாய்ப்புகள் இனி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் இனி வி.ஆர்.எஸ் கொடுத்துவிட்டு சுயதொழில் செய்ய முன்வருவர். நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக்கொள்ள யோக பலம் பெற்ற நாளில் ஆலங்குடி, குருவித்துறை, திட்டை, பட்டமங்கலம் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

"மூன்றினை குருதான் பார்த்தால் முயற்சியில் வெற்றியும் கட்டும்" என்று சொல்வர். எனவே நீங்கள் எடுத்த முயற்சிகளில் எல்லாம் வெற்றி கிடைக்கும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். எதிரிகளின தொல்லை குறையும். உயர்ந்த மனிதர்களின் ஒத்துழைப்பு உண்டு. சகோதரர்கள் சகாயமாக நடந்து கொள்வர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். நீண்ட நாட்களாக பூர்வீக இடத்தில் வீடு கட்ட முடியவில்லையே என்ற கவலை இனி மாறும். நிழல்போலத் தொடர்ந்த கடன்சுமை அகலும்.

"பதினொன்றைக் குருதான் பார்த்தால் பணத்தேவை பூர்த்தியாகும்" என்பர்.


## ஓகஸ்ட் 2 இற்கு மேல் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும்!

எனவே இனி பரிசு மழையிலும், பண மழையிலும் நனையும் வாய்ப்பு உண்டு. இளைய சகோதரத்தால் இணக்கம் ஏற்படும். அயல்நாட்டுத் தொடர்பு விருத்திக்கும். அந்நிய இனத்தார், மதத்தாரின் ஒத்துழைப்போடு எண்ணிய காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துரமுகி வருடத்தில் மீன ராசியில் பிறந்த பெண்களுக்கு நல்ல வாய்ப்புகள் நாடிவரப்போகின்றது. மாலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மாலை கிடைக்கும். வேலை கிடைக்கவில்லையே என்ற ஏங்கியவர்களுக்கு வேலை கிடைக்கும். இல்லத்தில் ஒற்றுமை பலப்படும். வருமானம் போதுமானதாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும்.

வருடத்தொடக்கத்தில் திருப்திகரமாக வாழ்க்கை அமைந்தாலும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குறைவற்ற செல்வமும், குதூகலமும் அதிகரிக்கும். அரசியல் மற்றும் பொதுப்பணியில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் திடீரென வந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தும். வியாழன் தோறும் குரு தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. பௌர்ணமி நாளில் மலை வலம் வந்து ஆலய வழிபாட்டை மேற்கொண்டால் நிலையான புகழும், நிம்மதியும் கிடைக்கும். தாய்வழி ஆதரவும் சகோதரர் ஒற்றுமையும் அதிகரிக்கும் ஆண்டு இது.



**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்தால் சில காரியங்களை விரைவில் செய்து முடிக்க இயலாது. தொழிலில் புதிய பங்குதாரர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகும். நீண்ட தூரத்திற்கு மாறுதல்கள் கிடைத்து நிம்மதி இழக்க நேரிடலாம். குடும்பச்சுமை கூடும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

கொடுக்கல்- வாங்கல்களில் ஒருசிலர் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடலாம்.

சனியின் வக்ர காலத்தில் கூடுதல் கவனத்தோடு செயறபட வேண்டும். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தடைகள் அதிகரிக்கும். கடை திறப்பு விழாக்களை நடத்திய நீங்கள், வியாபாரம் திருப்தியாக நடைபெறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். விரயங்கள் அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்குப் புதியபொறுப்புகள் திடீரென மாற்றப் படலாம். உடல்நலம் சீராக இருந்தால் கூட உற்சாகத்துடன் பணிபுரிய இயலாது. சனி கவசம் பாடி சனி பகவானை வழிபடுவது நல்லது.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து தென்முகக்கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு வந்தால் நன்மைகள் வந்து சேரும். குரு கவச பாராயணம் செய்தால் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(முற்றும்)

# புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்கள் 67 பேர் பன்னிரெண்டு நாடுகளில் தஞ்சம்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

**பன்னிரெண்டு நாடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்கள் 67 பேர் தொடர்ந்தும் அந்த அமைப்பிற்கு புத்துயிரூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிய வந்துள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் ஒன்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது**

விநாயகம், கபில் மாஸ்டர், முகுந்தன், தேவன் மற்றும் சிரஞ்சீவி மாஸ்டர் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்கள் 67 பேர் பன்னிரெண்டு நாடுகளில் வாழ்கின்றனர்.

பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, இந்தியா, ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, நோர்வே, மலேசியா, டென்மார்க், கட்டார், நெதர்லாந்து மற்றும் சுவிட்சர்லந்து ஆகிய பன்னிரெண்டு நாடுகளிலேயே மறைந்து வாழ்கின்றனர்.

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற எந்தவொரு விடுதலைப்புலி முக்கியஸ்தரையும் இதுவரை கைது செய்ய முடியவில்லை.

இவர்கள் தங்களுக்குள் ஒரு வலை யமைப்பை ஏற்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மீண்டும் புத்துயிரளிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்கள் சிலரின் உதவியுடன் இராணுவத்தினர் மேற்கொண்ட ஒபரேசன் டபள் எட்ச் புலனாய்வு நடவடிக்கையின் போது இவர்கள் தங்களையறியாமல் இராணுவத்தின் வலையில் வீழ்ந்திருந்தனர்.

எனினும் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்பான விபரங்கள் வெளியானதன் காரணமாக தற்போது இந்த நடவடிக்கையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# ஸ்ரீலங்கன் நிறுவனத்தை வேறு நிறுவனத்துடன் இணைப்பது குறித்து நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)



ஸ்ரீலங்கன் நிறுவனத்தை வேறுநிறுவனத்துடன்இணைப்பது குறித்து இரண்டு நாள் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனத்தை வேறு நிறுவனத்துடன் இணைத்து பணிகளை மேற்கொள்வது குறித்து இந்த இரண்டு நாள் விவாதத்தில் கலந்துரையாடப் படவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்க ஆட்சிக் காலம் முதல் இதுவரையில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக இதே நிலைமை நீடித்தால் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் சுமையை பொதுமக்கள் சுமக்க நேரிடும் என அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை கூட்டு நிறுவனமொன்றாக முன் னெடுப்பதற்கு அமைச்சரவை கடந்த 26 ஆம் திகதி அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சியாக கடன் பெற்றுக் கொண்டால் பாரியளவில் நிதி நெருக்கடி ஏற்பட்டு நிறுவனத்தை மூடி விடக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


எனவே வேறு நிறுவனமொன்றுடன் இணைத்து கூட்டு நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை முன்னெடுப்பது குறித்து அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளில் இரண்டு நாள் விவாதம் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா ஆகிய விமான சேவைகளை தரமான வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாத்திரமே வழங்குவோம். எமிரேட்ஸ் முன்வந்தால் அனுமதிவழங்குவோம்.

இது தொடர்பில் ஆலோசனை சபையே தீர்மானிக்கும் என்று மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார். (இ)

# சம்பந்தன் முன்னறிவிப்பு செய்து விட்டே இராணுவ முகாமுக்குள் நுழைந்தார்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு





எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்குள், முன்னறிவிப்புச் செய்து விட்டே சென்றார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் தகவல் வெளியிடுகையில்,

“எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் சரியான நெறி முறைகளுக்கு ஏற்பவே பரவிப்பாஞ்சான் இராணுவ முகாமுக்குள் சென்றிருந்தார்.

அதுபற்றி இலங்கை இராணுவத்தினால் எந்த பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப் படவில்லை. அவர்தனது பயணத்துக்கு முன்னதாக, யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தார். தமது வருகை தொடர்பாக, யாழ்.படைகளின் தளபதிக்கு, தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழையவில்லை. அதனால் எந்த பொலிஸ் நிலையத்திலும், முறைப்பாடு செய்யப்படவில்லை.

முக்கியபிரமுகர்களின்வருகை தொடர்பாக, முன்கூட் டியே அறிவிப்பது பற்றி, கிளிநொச்சிப் படைகளின் தளபதி, வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசி மூலம் உரையாடியிருந்தார். அது முறைப்பாடு அல்ல” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# செய்தித்துளிகள்

## நீர்த் தாங்கியில் விழுந்து குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு -வெள்ளவத்தை பகுதியில் வீட்டு முற்றத்தில் கட்டப்பட்டிருந்த நீர்த் தாங்கியில் விழுந்து குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பொலித்தீன் உற்பத்தி நிறுவனத்தில் பாரிய தீ

பூகொடை மண்டாவலை பகுதியில் அமைந்துள்ள பொலித்தீன் உற்பத்தி நிறுவனமொன்றில் நேற்று முன்தினம் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

கம்பஹா தீயணைப்பு படையினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து குறித்த தீயினை கட்டுப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ ஏற்பட்டதன் காரணம் இதுவரை அறியப் படாத நிலையில் ,அதனால் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் இதுவரை கணிப்பிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மதுபான போத்தல்களுடன் ஐந்து பேர் கைதாகினர்

வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் 5 சந்தேக நபர்கள் பலாங்கொட பகுதியில் கலால் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி சிகரெட் வகைகளும் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக கலால் திணைக்கள அத்தியட்சகர் பிரபாத் ஜெயவிக்ரம தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பலாங் கொடை பகுதிக்கு இவை எவ்வாறு கொண்டு செல்லப் பட்டுள்ளது என்பது தொடர்பில் சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ)

## கடல் கடந்த நாட்கள்

யாழ்.குருநகர் கலை இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் கலாபூஷணம் கு.இராயப்பு (கலையார்வன்) எழுதிய கடல் கடந்த நாட்கள் எனும் நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.குருநகர் சென்ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயத்தில் குருநகர் கலை இலக்கிய அமைப்பின் தலைவர் அ.யேசுராசா தலைமையில் நடைபெறும். (இ)

## மரணித்த மனிதம் கவிதை நூல் வெளியீடு

முல்லைப் பார்த்தா எழுதிய மரணித்த மரணம் கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் (கச்சேரிமுன்பாக) (YMCA) மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை (29.04.2016) பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இவ் விழாவிற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவனும் அகில இலங்கை இளைஞர் இலக்கிய மன்றத்தின் அமைப்பாளருமாகிய ஸ்ரீ சிவஸ்கந்த ஸ்ரீ தலைமை தாங்கவுள்ளார்.

மேலும் இந் நிகழ்விற்கு ப.கதிர்தர்சினி வரவேற்புரையையும், தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.கௌரி புத்திரி ஆசியுரையையும் வழங்குவார்கள்.

மேலும் செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் நூலின் முதற் பிரதியை வெளியிடவுள்ளார். (இ)

# தமிழ் சினிமா வரலாறு

## 150 நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது எம்.ஜி.ஆரின் கால் எலும்பு முறிந்தது

எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக ஜமுனா நடித்தார். மற்றும் பி.கண்ணாம்பா, ராஜசுலோசனா, எம்.ஜி.சக்ரபாணி, சின்னப்பதேவர், தங்கவேலு ஆகியோர் நடித்தனர்.

31.12.1959 இல் இப்படம் வெளிவந்தது.

ஆர்.ஆர்.சந்திரன், நல்ல ஒளிப்பதிவாளரே தவிர, நல்ல டைரக்டராகப் பிரகாசிக்க முடியவில்லை. கதையும் எம்.ஜி.ஆருக்கு ஏற்றதல்ல. அதனால் இப்படம் வெற்றி பெறவில்லை.

1960 இல் பாக்தாத் திருடன் ராஜா தேசிங்கு, மன்னாதி மன்னன் ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார்.

பாக்தாத் திருடன் சதர்ன் மூவிஸ் தயாரிப்பு. திரைக்கதையை ரவீந்தர் எழுத, வசனம் எழுதியவர் ஏ.எஸ்.முத்து. தயாரித்து இயக்கியவர் டி.பி.சுந்தரம்.

இதில் எம்.ஜி.ஆருக்கு ஜோடி வைஜயந்திமாலா. இருவரும் இணைந்து நடித்த முதல் படம். மற்றும் டி.எஸ். பாலையா, எம்.என்.நம்பியார், அசோகன், சந்தியா, ஹெலன் ஆகியோரும் நடித்தனர். இது சராசரிப்படம்.

**பத்மினியுடன் நடனப் போட்டி**

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ் தயாரித்த மன்னாதி மன்னன் 19.10.1960 இல் வெளிவந்தது.

எம்.ஜி.ஆருக்கு ஜோடி பத்மினி. மற்றும் அஞ்சலி தேவி, எம்.ஜி.சக்ரபாணி, பி.எஸ். வீரப்பா, ஜி.சகுந்தலா நடித்தனர். கதை-வசனம் கண்ணதாசன். இயக்கம்: எம்.நடேசன். இசை: விசுவநாதன்-ராமமூர்த்தி.

அச்சம் என்பது மடமையடா! அஞ்சாமை திராவிடர் உடமையடா! என்ற கண்ணதாசனின் புகழ்பெற்ற பாடல் இடம்பெற்ற படம் இது.

இதில், எம்.ஜி. ஆருக்கும் பத்மினிக்கும் நடனப் போட்டி நடக்கும். அதில் எம்.ஜி.ஆர். ஜெயிப்பார். பத்மினி தோற்பார்! பின்னர் எம்.ஜி.ஆரிடம் பத்மினி நடனம் கற்றுக் கொள்வார்.



“மன்னாதி மன்னன்” படத்தில் பத்மினியுடன் போட்டி நடனம்.

நடனக் கலையில் வல்லவரான பத்மினிக்கு ஈடு கொடுத்து எம்.ஜி.ஆர். ஆடியதை, ரசிகர்கள் பாராட்டினர். இந்தப் படம் சூப்பர்ஹிட்.

ராஜாதேசிங்கு

மதுரை வீரன் என்ற மாபெரும் வெற்றிப்படத்தை எடுத்த லேனா செட்டியாரின் கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரித்த படம் ராஜாதேசிங்கு.

வரலாற்றுப் பின்னணி கொண்ட கதை. கண்ணதாசனும் மக்களன்பனும் வசனம் எழுதினர். உடுமலை நாராயண கவி கண்ணதாசன், தஞ்சை ராமையா தாஸ் ஆகியோர் பாடல்களை எழுத ஜி.ராமநாதன் இசை அமைத்தார். டைரக்ஷன் டி.ஆர்.ரகுநாத்.

எம்.ஜி.ஆருடன் பானுமதி, பத்மினி ஆகியோர் இணைந்து நடித்தனர். மற்றும் எஸ்.எஸ்.ராஜேந்திரன், என்.எஸ்.கிருஷ்ணன், டி.கே.ராமச்சந்திரன், தங்கவேலு, டி.ஏ.மதுரம், எம்.என்.ராஜம், எம்.சரோஜா ஆகியோரும் நடித்தனர்.

இந்த பிரமாண்டமான படம் நீண்டகாலம் தயாரிப்பில் இருந்தது. கதைப்படி, இதில் எம்.ஜி.ஆர்.இறந்து விடுவார். இதை எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் ஏற்கவில்லை. அதனால் படம் ஓடவில்லை.

எம்.ஜி.ஆர். பொதுவாக சரித்திரப் படங்களிலும் ராஜாராணி படங்களிலும் நடித்து வந்தார்.

ஒரு சில சமூகப் படங்களில் நடித்தாலும் வேட்டி- சட்டை அணிந்து நடிப்பார்.

அவர் கோட்டு-சூட்டு முதலான நவீன உடைகள் அணிந்து நடிக்க வழி வகுத்த படம் திருடாதே. (தொடரும்)

# குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை



...தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு கூட்டுத் தண்டனை வழங்கும் அதே வேளையில் தமிழ் மக்களை அதிகளவில் கொன்றுகுவித்த குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காவிடின் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்கின்ற உண்மையை சிறிசேன அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கத்தால் தமது இரத்த உறவுகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களை தமிழ் மக்களால் அவ்வளவு இலகுவாக மறக்கவோ அல்லது மன்னிக்கவோ முடியாது. ஆகவே போர்க் குற்றங்களை இழைத்த முன்னாள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தற்போதைய ஜனாதிபதி சிறிசேன தண்டனை வழங்க முன்வருவதுடன், தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள்.

சிறுபான்மையினருக்கு எதிராக குறித்த நாட்டு அரசாலோ அல்லது தனிப்பட்டவர்களாலோ இழைக்கப்படும் குற்றங்கள் தண்டனைக்குரியவையாகும். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை என்பதே உண்மையாகும். இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய நிலைப்பாடானது தமிழர் எதிர்ப்புக் கொள்கையை இது இன்னமும் கைவிடவில்லை என்பதையும் இந்திய எதிர்ப்புக கொள்கை இன்னமும் வலுவாக உள்ளதையும், தாம் விரும்புகின்ற வேளையில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையின் இராணுவமானது யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் என்பதையுமே சுட்டிநிற்கின்றது.

பல்வேறு அமைப்புக்களினதும் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்திய-அமெரிக்க யுத்தம் போன்றவற்றின் ஆதரவுடனும் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களை மகிந்த அரசாங்கம் இழைத்தது. தற்போது ஐ.நா.வின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் சிறிசேன அரசாங்கம் தயக்கம் காண்பித்து வருவதுடன், போர்க் குற்றங்கள் தொடர்பாக உள்நாட்டு நீதிப்பொறிமுறையை மட்டுமே மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறி வருகிறது.

சிறிசேன அரசாங்கத்தின் நற்சான்றுடன், ராஜபக்ஷ மீண்டும் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்ற முன்வரலாம். ஆனால் இது நடக்கக் கூடாது.

போர்க் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தி, தமிழ் சமூகமும் ஏனைய சிறுபான்மை சமூகத்தினரும் இலங்கைத் தீவில் சுதந்திரமாக வாழலாம் என்கின்ற நிலையை உருவாக்க வேண்டியது சிறிசேன அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் விசாரணை செய்து போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதானது இலங்கையின் ஜனநாயகத்தை மேலும பலப்படுத்துவதுடன், உலகமெங்கும் இடம்பெறும போர்க் குற்றங்களைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும். (முற்றும்)

தாயும் தன் பிள்ளையைத்
தள்ளிப்போமோ
–பாரதியார்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தன் தார்மீகக் கடமையை இந்தியா செய்யுமா?

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவானது இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் துணைத் தூதர் ஆர்.நடராஜன் மூலமாக இந்திய மத்திய அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ள இத்தீர்வுத்திட்ட முன்மொழிவானது ஏனைய சர்வதேச நாடுகளுக்கும் வழங்கப்படும் என தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய வேண்டுமாயின் அதற்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனவே இதன் அடிப்படையில் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்ட முன்மொழிவானது சர்வதேச நாடுகள் அனைத்துக்கும் தெரியப்படுத்துவது அவசியம் என்பது ஏற்புடையதாகும்.

தமிழ் மக்கள் தங்களுக்கான ஆகக்குறைந்த தீர்வாக எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை எழுத்து மூலம் தெரியப்படுத்துவது ஒரு நியாயமான அணுகுமுறையாக இருக்கும் .

இன யுத்தம் நடந்து முடிந்து ஏழு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில், இன்னமும் தமிழ் மக்களுக்காக உரிமைகள் வழங்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்குரிய தீர்வுத்திட்டத்தை வழங்குவது அவசியம் என்ற நினைப்புகள் தென்பகுதியில் இருப்பதாகவும் தெரியவில்லை.

சமஷ்டி என்றவுடன் பேரினவாதிகள் கொதித்து எழுகின்றனர். நாட்டைக்கூறுபோட ஒருபோதும் இடமளியேன் என்கிறார் இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இவற்றைப் பார்க்கும் போது இங்கு என்னதான்நடக்கிறது? என்றகேள்வி எழுகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டைக் கூறுபோட்டுத் தாருங்கள் என்று கேட்கவில்லை. மாறாக சிங்கள மக்கள் போன்று தமிழ் மக்களும் சுதந்திரமாக – நிம்மதியாக வாழவேண்டும். இதற்கான உரிமைகளைத் தாருங்கள் என்றே கேட்கிறார்கள்.

சமஷ்டி என்பது தமிழ் மக்கள் இன்னுமொரு பிரச்சினைக்குள் சிக்குண்டு சின்னாபின்னப்படாமல் இருப்பதற்கான ஒரு தீர்வு முறையாகும். இதுபற்றி தென்பகுதி மக்கள் எந்த வகையிலும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எனினும் அவர்கள் அச்சம் கொள்பவர்களாக இருந்தால் அது தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தல் அவசியம் . இதைச் செய்வது காலத்தின் கட்டயமாகும்.

இதற்கு மேலாக ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதற்கு மேலாக இந்தியாவின் பங்கும் பணியும் மிகவும் அவசியமானது ஆகும்.

இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது ஒருபோதும் சாத்தியமாகாது. எனவே இவ்விடத்தில்தான் இந்தியா தனது தார்மீக கடமையை செய்தாக வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்தின் பின்னணியில் இந்தியாவும் இருந்தது என்ற தகவல்கள் உள்ளபோதிலும் இன்றுவரை தமிழ் மக்கள் இந்தியாவை நம்புகின்றனர்.

இந்தியா எங்களுக்கான உரிமையைப் பெற்றுத் தரும். பெற்றுத்தரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கை.

ஆகையால் தமிழ் மக்கள் பேரவை கொடுத்த தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா முன்வரவேண்டும்.

இவ்விடத்தில் சமஷ்டி எந்த வகையிலும் இலங்கையைக் கூறுபோடாது என்ற உத்தரவாதத்தை இந்தியா தென்பகுதி மக்களுக்கு வழங்கும் போது சமஷ்டி என்ற தீர்வு சாத்தியமாவது இலகுவாகும் என்பதால், இந்தியா தனது தார்மீக கடமையை செய்யவேண்டும் என்பதே தமிழ் மக்களின் வேண்டுதல் ஆகும்.

# புதிய தொகுதி அமைப்பாளர்களை ஜனாதிபதி மைத்திரி நியமித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட மற்றும் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களாக 11 பேரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஹிரியால தொகுதி அமைப்பாளராக வடமேல் மாகாண சபை உறுப்பினர் கமல் இந்திக, கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களாக மேல்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான காமினி சில்வா, புத்திக இத்த மல்கொட, களுத்துறை அமைப்பாளராக மனுல சமல் பெரேரா, காலி மாவட்ட அமைப்பாளராக பியல் தர்சன குருகே, கேகாலை மாவட்ட அமைப்பாளராக நலின் புஷ்பகுமார, குருநாகல் மாவட்ட அமைப்பாளராக துஷார திலக்கரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டம் பெந்தறை–எல்பிட்டிய தொகுதியின் இணை அமைப்பாளர்களாக பெந்தொட்டை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கயான் கிரிசான் சிரிமான்ன மற்றும் எல்பிட்டிய பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அமில ஹர்சன ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பென்தர எல்பிட்டிய தொகுதி அமைப்பாளர் கீதா குமாரசிங்க மற்றும் ஹிரியாவ தொகுதி அமைப்பாளர் சாலிந்த திஸாநாயக்க ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். (இ)

# மே தினத்திற்கு பின் வற் வரி அதிகரிக்கும்

## வாழ்க்கைச் செலவு வானுயர்வது உறுதி

### ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

அரசாங்கம் எதைச் சொல்லி ஏமாற்றினாலும் மே தினத்திற்குப் பின் 'வற்' வரி அதிகரிக்கப்பட்டு வாழ்க்கைச் செலவு வானுயர அதிகரிக்கப் போவது உறுதி என முன்னாள் அமைச்சரும் கூட்டு எதிர்க் கட்சியின் முக்கியஸ்தருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

சில்லறை மற்றும் மொத்த வர்த்தக நடவடிக்கைகளில் 15 வீத வரி அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தொலைத் தொடர்பு உட்பட முக்கிய பலவற்றுக்கு இந்த வரி அதிகரிப்பு நடைமுறைக்கு வருவது மக்களுக்கு பெரும் சுமையாக அமையப்போகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை மூன்றில் ஒருவர் கார் வைத்துள்ளனர். இவர்களையும் இந்த வரிச் சுமை அழுத்தும் என குறிப்பிட்ட அவர், ஆபரணத்துறை உட்பட அனைத்துத் துறை செயற்பாடுகளையும் இது பாதிக்கும் என்றும் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு என். எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும் மகிந்த அணி முக்கியஸ்தருமான டளஸ் அழகப்பெரும, மூத்த அரசியல்வாதியான ராஜா கொல்லுரே ஆகியோர் பங்கேற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து விளக்கமளித்த ஜீ. எல். பீரிஸ்,

தற்போதைய அரசாங்கமானது வருடத்தில் இரண்டு தடவை வரவு செலவு திட்டத்தை நடத்தி வருவது திருப்திப்படக்கூடியதல்ல. இது அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இல்லாதொழிப்பதுடன் முதலீட்டாளர்களின் அதிருப்தியையும் சம்பாதிக்கும் அரசாங்கம் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்தத் தவறினால் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன் வரமாட்டார்கள்.

நாட்டில் தேசிய அரசாங்கம் ஆட்சியிலுள்ளது எனக் கூறப்பட்டாலும் உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே நாட்டை ஆட்சி செலுத்துகிறது. பிரதமர், நிதியமைச்சர் போன்றவர்கள் தன்னிச்சையான தீர்மானங்களையே எடுக்கின்றனர். அத்தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவதாகத் தெரியவில்லை. இதன் மூலம் அவர்களின் எதேச்சாதிகாரமே இடம்பெறுகிறது.

அரசாங்கத்தின் பல முக்கியமான நிறுவனங்களை கையகப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருவதையும் காணமுடிகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தனர். (இ)

# திங்கட்கிழமை விடுமுறை நாள்

மேதினம் விடுமுறை தினத்தில் (ஞாயிற்றுக்கிழமை) வருவதனால் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கு 02. 05.2016 திங்கட்கிழமை சிகை ஒப்பனை நிலையங்களுக்கு விடுமுறை நாளாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் அறி வித்துள்ளது. (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில வவுனியா கிறிட்டிலிருந்து வவுனியா நகரம் வரை, 2ஆம் குறுக்கு வீதி, ஓவியா விடுதி, ராணி அரிசி ஆலை, லங்கா ஆலை, செல்வ ராஜா ஆலை, சாம்பல்தோட்டம் கிராமம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்பு வைத்த குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# ஹற்றனில் விபத்து; போக்குவரத்து பாதிப்பு

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில், கினிகத்தேனை 20ஆம் மைல்கல் பகுதியில் கொள்கலனொன்று குடைசாய்ந்துள்ளதால் அவ்வீதி வழியான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்த தாகவும், குறித்த பகுதிக்கான போக்குவரத்து ஒருவழிப் பாதையாக இடம்பெற்றதாகவும், கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று அதி காலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலையிலிருந்து கொழும்புக்கு 12 தொன் நிறை யுடைய தேயிலைத் தூளை ஏற்றிச்சென்ற கொள்கலனே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனத்தில் தடுப்பு கட்டை செயலிழந்ததன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இவ்விபத்தில் ஒருவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

# புனித திருத்தல யாத்திரை இன்று நல்லூரில் ஆரம்பம்

சிவபூமியாகிய இலங்கை மணித் திருநாட்டில்அமைதியானவழியில்சாந்தி, சமாதானம் ஏற்பட திருவருள் ஒன்றே துணை செய்யும் என்ற ஒரே நோக்கோடு உலக சைவத்திருச்சபை– இலங்கை– பன்முகப்பட்ட ஆன்மிக சேவைகளைச் செய்யவுள்ளது. அவ்வகையில் முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் சிறப்பாக 30.04.2016 சனிக்கிழமை நடேசர் அபிஷேகம் நடைபெறவுள்ளது.


அன்றைய தினம் உலக சைவத் திருச்சபை இலங்கை தல யாத்திரை செய்து திருவாசக முற்றோதல்– திருவாசக உலாவையும் செய்யவுள்ளது.


சிவஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி முன்னேஸ்வர அதிபர், ஆசிரியர்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் சைவசமயப் போட்டிகளை நடத்தி மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வையும் மேற்கொள்ளவுள்ளது.



உலக சைவத்திருச்சபை இலங்கை ஈழ மணித்திருநாட்டில் சைவசமய கலாசார நிலையங்கள், மன்றங்கள், ஆதீனங்கள் என்பவற்றை ஒன்றிணைத்து இச்செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது. புனித திருத்தல யாத்திரிகர் சேவா சங்கம்– இலங்கை தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம், வெள்ளிப்பன்னத்து வீரகத்திப் பிள்ளையார் இந்து மாமன்றம், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம், திவ்ய ஜீவன சங்கம்– தென்மராட்சி, சின்மயாமிஷன்–யாழ்ப்பாணம், அருள்மிகு சபரீஸ்வர ஐயப்ப சேவா சங்கம்–இலங்கை, நல்லை ஆதீனம் எனப் பல சைவசமய நிறுவனங்கள், ஆதீனங்கள் இணைந்து இக் கைங்கரியத்தை மேற்கொள்ள உலக சைவத் திருச்சபை– இலங்கை. பல முயற்சி களை மேற்கொண்டு வருகின்றது.

அன்றையதினம் முன்னேஸ்வரம் ஆலயம் சிவன் திருவருள் என்னும் அருள் நூலை வெளியிடவுள்ளது சிறப்பம்சமாகும். இன்று மாலை 6 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து புனித திருத்தல யாத்திரை ஆரம்பமாகவுள்ளது. (இ

# சதுரங்கப் போட்டி வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் பயிற்சி முகாமும்




இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2016ஆம்ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கும், சான்றிதழ் பெற தகுதி பெற்றோருக்குமாக 80 வீர, வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் , அவர்களுக்கான பயிற்சி பட்டறையும் இடம்பெற்றது.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத் தலைவர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியின் மாவட்ட மட்டத் தெரிவுப் போட்டிகள் முதல் முறையாக கிளிநொச்சியில் கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஐம்பத்து மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் இருபத்தேழு பேர் சான்றிதழ் பெறத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் பயிற்சி வழங்கலும் நிகழ்வே நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்களை கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் , கிளிநொச்சி வலய ஆசிரிய ஆலோசகர் எஸ். குமரன், கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் செயலாளர் எஸ்.சுதாகரன் , பொருளாளர் பொறியியலாளர் ப.கஜன், உபசெயலாளர் பொறியியலாளர் வி.விஜிதரன், சுற்றுப் போட்டிகளுக்கான உப தலைவர் ச.கௌரீசன் , இதழாசிரியர் ப.கார்த்திகா, சதுரங்கப் போட்டிகளின் கிளிநொச்சி மாவட்ட நடுவர்களான தி.லோஜினி, க.மதுமிதா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து சதுரங்கப் பயிற்சி வழங்கலும் நடைபெற்றது. (க)

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது உதயசூரியன் விளையாட்டுக்கழகம்



பாரதி வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் உதயசூரியன் வி.கழகம் மற்றும் கட்டைக்காடு சென்மேரிஸ் வி.கழகம் ஆகியன நேற்று மோதின. இதில் உதயசூரியன் வி.கழக அணி தண்ட உதை மூலம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (க)

# இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிடடி சிவகுமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணியும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. (க)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கலைஒளி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி கலைஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று மாலை 6.50 மணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி ஐக்கியம் B2 அணியை எதிர்த்து அச்சுவேலி 12 ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா அணியும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிறுப்பிட்டி கலைஒளி அணியை எதிர்த்து வடகம்பறை அம்பாள் அணியும் மோதவுள்ளது.(க)

# கடற்கரை உதைபந்தாட்டம் ரேவடி இளங்கதிர் வெற்றி

உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கடற்கரை உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றது. சைனிங்ஸ் B அணி ரேவடி அணியுடன் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் போட்டன. சமநிலை தவிர்ப்பு உதையும் சமநிலை பெற நாணயச் சுழற்சியில் ரேவடி அணி வெற்றி பெற்றது.

மற்றைய காலிறுதி ஆட்டத்தில் சைனிங்ஸ் A அணி இளங்கதிர் அணியுடன் மோதியது. விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாத இவ் ஆட்டத்திலும் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் போட சமநிலை தவிர்ப்பு உதையில் இளங்கதிர் அணி வெற்றி பெற்றது. (க)

# றோயல் வெற்றி

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக்ம் நடாத்தும் உதைபந்தாட்ட தொடரின் சுப்பர் 8 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி தாவடி காளிகாம்பாள் அணியுடன் மோதியது. இப்போட்டியில் ஊரெழு றோயல் அணி 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. றோயல் அணி சார்பில் நட்சத்திர வீரர்களான கோபன்.நிதர்சன் ஆகியோர் தலா இரண்டு கோல்களைப் பெற்றனர். (க)

# அமரர் கந்தையா சுப்பிரமணியம் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி






எல்லாளன் வி.க. அணியினர் நடத்தும் அமரர் கந்தையா சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி அண்மை யில் எல்லாளன் வி.க. மைதானத்தில் நடைபெற்றது.


இப் போட்டியில் றொக்கட் அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற எல்லாளன் வி.க. அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். நிர்ணயிக்கப்பட்ட 10 பந் துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தனர்.

அதிகபட்சமாக செந்தூரன் 24, விதுஷன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றொக்கட் அணி சார்பாக ஜெனெக்ஸ் 2, சாள்ஸ் 2 , டான்சன் , டயாத் தலா ஒரு இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றொக்கட் அணி 9.4 பந்துப் பரிமாற்றங்களில் அருணண், ஜெனெக்ஸ், சாள்ஸ் மூவரின் சிறந்த துடுப்பாட்டம் மூலம் அமரர் கந்தையா சுப்பிர மணியம் ஞாபகார்த்த கிண்ண வெற்றியை தனதாக்கியது.

போட்டியின் தொடர் நாயகன் றொக்கட்டின் ஜாக்கி தெரிவானார். (க)

# மரண அறிவித்தல்



## சிவகுரு துரைராசா

பெரியவிளான் டச்சு வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு துரைராசா நேற்று (28.04.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம் - லட்சுமி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான முத்துராசா, நடராசா, இராசரத்தினம் மற்றும் தம்பிராசா, நவரத்தினம், தவமணி, சரஸ்வதி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், ஜெயராசா, வடிவம்மா, செல்வராணி, புஸ்பராணி, புஸ்பராசா, செல்வச்சந்திரன், இந்துராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி, ஸ்ரீதரன், இரத்தினகுமார், சந்திரசேகரன், சிவமலர், விக்கினேஸ்வரி, விக்கினராசா ஆகியோரின் அன்பு மாமனும், சஜீவ், சுநீதா, ஸ்ரீதேவி, கிஷோ, சிவலேனுகா, சஜித், சிவாஜன், கேதீஸ்வரன், நிலானி, துவாரகா, ஜனதா, தனுறாஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும், சிகன்சிக்காவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பெரியவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
பெரியவிளான், இளவாலை.

தகவல் :
குடும்பத்தினர்.

(4338)

# பொலிஸாராலேயே இருவரும் கைது!

வடமராட்சி கிழக்கில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் பகுதியை சேர்ந்த ஜோர்ச் இராஜநாயகம், வீ.மைக்கல் ஆகியோர் நேற்று முன்தினம் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தி செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த இரு சந்தேக நபர்களும் கஞ்சா மற்றும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பி இருந்து வந்த விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவினராலேயே கைது செய்யப்பட்டதாகவும் மேலதிக விசாரணைக்காக இவர்கள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (செ-9)

# வீதி விபத்தில் மாணவி காயம்

(கொழும்புத்துறை)

வீதியைக் கடக்க முற்பட்டவேளை, மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அதிமதிக் கப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அளவெட்டி மலைவேம்படிப் பகுதியில் இவ்வி பத்து இடம்பெற்றுள்ளது. இதில் அருணாச்சலம் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் எஸ்.கனிஷ்ரா என்ற மாணவியே காயமடைந்தவராவார்.

மேற்படி விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-51)

# சிங்கள குடியேற்றங்களை அகற்ற வலியுறுத்துவோம்

## ம.ந.கூட்டணி தேர்தல் அறிக்கை

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்காக மக்கள் நலக் கூட்டணி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில், இலங்கையில் தமிழர் பகுதியில் உள்ள சிங்களக் குடியேற்றங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியவை இணைந்து தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கென மக்கள் நலக் கூட்டணியை அமைத்துள்ளன.

இந்தக் கூட்டணி விஜயகாந்த் தலைமை யிலான தே.மு.தி.க., வாசன் தலைமையி லான தமிழ் மாநில காங்கிரஸ் ஆகியவற்று டன் இணைந்து சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கிறது.

இந்த நிலையில், மக்கள் நலக் கூட்டணியின் சார்பில் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இலங்கையில் தனி ஈழம், கூடங்குளம் அணு உலை விவகாரம் ஆகியவற்றில் மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவை இடையே ஒத்த கருத்தைக் கொண்டிருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இதில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதால் அவை தொடர்பாக இந்த தேர்தல் அறிக்கையில் எதுவும் இடம்பெறவில்லை என வைகோ கூறினார். (செ-12)

## கைதாகும் முன்னாள் போரா...

வினவியுள்ளார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்படும் நபர்கள் பூசா தடுப்பு முகாமில் அல்லது கொழும்பு 4 ஆம் மாடியில் தடுத்து வைக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, அவர்க ளது குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கான அனைத்து நடவ டிக்கைகளையும் மேற்கொள்வோம் என வாக்குறுதி அளித்த நல்லாட்சி அரசாங்கம் தற்போது அவர்களை கைதுசெய்வதாகவும் கவலை தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கடந்த ஆட்சியைப் போன்றே நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளும் அமைந்துள்ளதாகவும் காணாமல் போனவர்களை தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கிலே ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று கூறினாலும், இன்று ஜனநாயக ரீதியாக எவரையும் கைதுசெய்யதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில்லை. காரணம், சிவில் உடையில் வந்து, வெள்ளைவானில் கடத்தி செல்லப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். ஜனநாயகம் உண்மையாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் உரிய முறையில் அவர்களுடைய சீருடையில் வந்து கைது செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-12)

# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

**மேற்படி விடயம் தொடர்பாக 26.04.2016-ம் திகதிய பத்திரிகை கேள்வி அறிவித்தல் தொடர்பானது,**

தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபரால்/ மாவட்டச் செயலரால் பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் - V, கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் - IV, மாவட்டச் செயலக ஆண்கள் மலசலகூட புனரமைப்பு ஆகிய கட்டட வேலைகளுக்கான கேள்வி கோரல் பிராந்திய ஒப்பந்தகாரரிடமிருந்து (வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்) கோரப்படுவதுடன் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்பதை அறியத் தருகின்றேன். மீதி நிபந்தனைகள் எதுவித மாற்றங்களுமின்றி வலுவில் இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாற்றங்கள் வருமாறு :**

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| JF/CDA/ E.C.C- P/ 01/17/2016 | பருத்தித்துறை கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 9.17 | 05 | C7 | 91700.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C- K/ 01/17/2016 | கரவெட்டி கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 6.32 | 05 | C7 | 63200.00 | 2000/= |
| JF/CDA/ E.C.C CH/ 01/17/2016 | சாவகச்சேரி கலாசார மத்திய நிலையம் கட்டம் – IV | 8.46 | 05 | C7 | 84600.00 | 2000/= |
| JK/SW/ MRW/ 2016/16 | மாவட்டச் செயலக ஆண்கள் மேல்தள மலசல கூட புனரமைப்பு வேலை | 2.77 | 04 | C8 | 27700.00 | 2000/= |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C-4456)

## Holy Family Convent, Jaffna Past Pupil's Association Annual General Meeting, 2016

### Postphonment of the Annual General Meeting, 2016

This is to inform all members of the above association that the **Annual General Meeting**, which was to be held on the **30th of April, 2016 (Saturday) at 3.30 p.m.has been postponed due to unavoidable circumstances.**

We regret any inconvenience caused by this change

The date of the meeting will be notified to all members as soon as possible.

**Principal**
**J/Holy Family Convent,**
**Jaffna.**

**Secretary**
**Past Pupils' Association**
**Holy Family Convent, Jaffna.**

(4336)

# ஒழுக்காற்று நடவடிக்கை...

சேன மீதே முதலில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்டவர் அவரே என சனத் நிசாந்த குற்றம் சுமத்தினார்.

இவ்வாறு எல்லாத் தவறுகளையும் அவர்களே செய்துவிட்டு தற்போது ஒன்றும் செய்யாததைப் போல் மற்றவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கச் சொல்வது எந்த வகையில் நியாயம் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது உள்ள நிலைமைக்கு கட்சி உறுப்பினர்களே காரணமாக உள்ளார்கள்.

கட்சியின் தோல்விக்கும் இவர்களே காரணமாவார்கள்.

கடந்த தேர்தலின் போது சு.கட்சி வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் பிரதமர் பதவி சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படாது என பகிரங்கமாக தெரிவித்திருந்தார்கள்.

இந்தக் கூற்று கட்சி உறுப்பினர்களின் மனதை வெகுவாக பாதித்திருந்தது எனவும் சுட்டிக்காட்டினார்.

அன்று அவ்வாறு கூறியவர்களே தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு வாருங்கள் என பகிரங்க அழைப்பு விடுக்கின்றார்கள் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த விசனம் தெரிவித்தார். (செ-12)

# முகநூலில் புலித் தொடர்பு...

கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மன்னாரில் வைத்து பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சிவகரன் நேற்றையதினம் சாவகச் சேரி நீதிமன்றில் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருநதார்.

இதன் போது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் கைதுக்கான காரணத்தை மன்றில் தெரிவித்துள்ளனர்.

மறவன்புலோவில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவத்தோடு வெளிநாட்டில் உள்ள புலிகள் சிலர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இவர்களோடு சிவகரனும் பேஸ புக் மற்றும் வேறு வழிகளிலும் சம்பந்தப்பட்டிருப்பதனாலேயே கைது செய்யப்பட்டார் என ரி.ஐ.டி.காரணம் கூறியுள்ளது. இந்நிலையிலேயே சிவகரன் வெளிநாடு செல்வதற்கும் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் கையொப்பமிட வேணடும் என்ற பிணை நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றையதினம் விடுதலையாகிய சிவகரன் நீதிமன்றத்துக்கு வெளியே வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசிற்கு எதிராகவும் அதன் புலனாய்வு பிரிவிற்கும் எதிராகவும் அறிக்கைகள் மற்றும் பிரசாரங்களை மேற்கொண்டதனாலேயே தான் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்த சிவகரன் விசாரணை குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் ஆஜர்ப்படுத் தப்பட்ட சிவகரனை ரூபாய் ஒரு இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட் பிணையிலும் செல்ல அனுமதித்ததோடு,

பிணைக்கால பகுதியில் வெளிநாடு செல்ல முடியாது எனவும் அவ்வாறு செல்வதானால் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் அனுமதி பெறப்படல் வேண்டும் எனவும் பிணை நிபந்தனை கடுமையாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நேற்றைய வழக்கில் சிவகரன் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் மன்றில் தோன்றி பிணை விணணப்பம் செய்திருந்தார். (செ-4)

# இரு மீனவர்...

பகுதி மீனவர்கள் 4 படகுகளில் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் போது குறித்த மீன வர்களின் படகு மீட்கப்பட்ட போதி லும் மீனவர்களை நேற்று இரவு வரை மீட்பு முயற்சி வெற்றியளிக்க வில்லை.

இது தொடர்பில் முல்லைத் தீவு பொலிஸ் மற்றும் முல்லைத்தீவு கடற்படையினரிடம் முறைப்பாடும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்த வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று அறிந்து கொண்டதுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக உதவி புரிந்து வருகிறார். (செ-310)


விற்பனைக்குண்டு

ஆசிரியரின் தனிப்பாவனையிலுள்ள HONDA CD 125 Twin NP TK... இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (C-4452)

தொடர்புகளுக்கு : 0779553216

நீங்கள் தொழில் தேடுபவரா?



யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்

O/L உடன் Business & Hotel Management UK Certified

Certificate – Diploma – Bachelors Degree

With English Course Free

Up to 30% DISCOUNT

3-4 மாதங்களில் உங்களால் முடியும்

கற்கைநெறி சான்றிதழுடன் பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.

தனிமனித ஆளுமை மற்றும் ஆங்கில பேச்சுத்திறன் விருத்தி.

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

அடுத்த 6 மாதங்களில் Diploma வுடன் யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நிரந்தர தொழில் ஏற்பாடு.

Scholarships Available

புதிய பிரிவு ஆரம்பம் 09-05-2016

அனுமதிகளுக்கு: 077 36 16 798 021 222 0011

SIKARAM ACADEMY Business · Hospitality · English School of Hospitality

மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


# 705 பேரினது...

நடைபெற்று முடிந்த கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 146 பேருக்கான அழைப்பினை விடுத்த போதும் 705 பேர் சாட்சிய பதிவுகளை மேற்கொண்டுள்ளனர. அத்தோடு 283 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என ஜனாதிபதி ஆணைக்குழுவினர் தெரிவிப்பதோடு கடந்த ஏழு வருடமாக பதிவுகளை மேற்கொள்ளாத பலர் தாம சுகவீனம் உற்று இருந்ததாகவும் வெளிநாடுகளுக்கு சென்று வந்ததாகவும் அதனால் முன்னைய பதிவுகளில் பதியவில்லை எனவும் பல காரணங்களை கூறியதாக தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்று வந்த இவ் அமர்வில் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 360 பேருக்கான அழைப்பினை விடுத்த போதும் 178 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். அத்தோடு 69 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

மறுநாள் செவ்வாய்கிழமை கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 359 பேருக்கான அழைப்பினை விடுத்த நிலையில் 221 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். அத்தோடு 76 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 240 பேருக் கான் அழைப்பினை விடுத்த நிலையில் 179 பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் அத்தோடு 80 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றையதினம் பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 187 பேருக்கான அழைப்பினை விடுத்த நிலையில் 127 பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் அத்தோடு 58 பேர் புதிதாக பதிவுகளை மேறகொண்டுள்ளனர என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-2,281,312)

# எதிர்க்கட்சித் தலைவரு...

கும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இனவாதத்தின் மிக உச்ச கட்டத்தையே இந்த தீர்மானம் வெளிப்படுத்துகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த கால தேர்தல்களின் போது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனியாட்சிக்கான வலியுறுத்தலையே முன்வைத்திருந்தனர்.

மேலும் தமிழகத்தின் முதலமைச்சர் இலங்கையில் தமிழீழம் உருவாக வேண்டும் என பெரும் போராட்டத்தையே முன்னெடுத்து வருகின்றார்.

ஆனால் இவர் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீரழித்து விட்டு மீன்களை கொள்ளையடித்து செல்வது குறித்து ஒன்றும் பேசுவது இல்லை.

எனவே தற்போதைய சூழ்நிலையில் இனவாதம் மிகவும் மோசமாக கையாளப்படுகின்றது. குறிப்பாக பிரிவினைவாதம் உச்சக் கட்டத்தில் செயற்பட்டு தனி நாட்டிற்கான இலக்கை அடைவதற்கு தேவையான அரசியல் பயணத்தை முன்னெடுத்துள்ளது.

எனவே நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக நாட்டு மக்களை தெளிவுப்படுத்துவதோடு பாராளுமன்றத்தில் உள்ள இனவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் கூட்டு எதிர்க் கட்சி செயற்படுகின்றது.

நாட்டின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் பாதுகாப்பதாக உறுதிமொழி வழங்கி அதிகாரத்திற்கு வருபவர்கள் இன்று நாட்டை காட்டிக்கொடுக்கும் விதமாக செயற்படுகின்றனர் என பந்துல குற்றஞ்சாட்டினார். (செ-12)

# புகைப்பட சர்ச்சை...

ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தாய்லாந்து நோக்கி பயணித்த குழுவுடன் கொலை மற்றும் ஆயுத கொள்வனவு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என தேடப்படும் உதயங்க வீரசிங்க இணைந்து எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று கிடைத்துள்ளது.

இதிலிருந்து குறித்த நபர் தொடர்பில் மகிந்த தொடர்பு பட்டிருப்பதாக நலின் பண்டார சுட்டிக்காட்டினார்.

மேலும் குறித்த நபர் இருக்கும் இடம், அவருடன் தொடர்புடையவர்கள் பற்றியும் மகிந்த தரப்பிற்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளதாகவும், அவர்களை விசாரணைகளுக்கு உட்படுத்துவதன் மூலம் சந்தேக நபரை கைது செய்ய முடியுமெனவும் அரசாங்கத்தை கேட்பதாக பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தன்னுடன் இருந்த நபரொருவரின் மரணத்துடன் தொடர்புடையவராக தேடப்படும் உதயங்க வீரசிங்க, மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புடன் மறைந்து இருப்பது இந்த புகைப்படத்தில் புலனாவதாக நலின் பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இலங்கை விமான சேவையில் கடந்த அரசாங்கம் 46 127 கோடி ரூபாய் பணத்தினை கொள்ளையிட்டுள்ளதாகவும் மேலும் 15 பில்லியன் டொலர் பெறுமதியான விமானம் ஒன்று ஜனாதிபதி பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

மேலும் குத்தகை அடிப்படையில் 4 விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு 11.12 மில்லியன் டொலர் மாதம் செலுத்த வேண்டிய நிலை காணப்படுவதாகவும் விமானத்தைக் கனவிலும் கண்டிராத சாதாரண மக்கள் இதற்காக கடன் பட்டுள்ளதாகவும் நலின் பண்டார மேலும் தெரிவித்தார். (செ-12)

# கிணற்றில் வீழ்...

யளவில் ஊரெழு பகுதியில் இடம் பெற்றது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த குணசிங்கம் சத்தியகுமார் (வயது 43) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காகவும் மரண விசாரணைகளுக்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

# யோஷித நேற்று...

வான் நீதிமன்றில் முன்னிலையானார்.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி தொடர்பில் இடம்பெறும் வழக்கு விசாரணை ஒன்றிற்காகவே அவர் நீதிமன்றில் முன்னிலையானார்.

அவரை தவிர வழக்கின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள சீ.எஸ்.என் தொலைக் காட்சியின் முன்னாள் முதன்மை நிறைவேற்று அதிகாரி நிஷாந்த ரணதுங்க உள்ளிட்ட சிலரும் நீதிமன்றில் முன்னிலையானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

# ஆர்ப்பாட்டம்...

இந்த தாக்குதல் மேற்கொள்ளபபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக கொழும்பு கோட்டை லோட்டஸ் சுற்றுவட்டம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2016

காலம் - 15.05.2016
நேரம் - காலை 8.30 மணிமுதல்
இடம் - கல்லூரி மண்டபம்

காலை 8.30 மணிக்கு பழைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான சிநேகபூர்வமான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இடம்பெறும்.

தொடர்ந்து காலை 10.00 மணியளவில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகும்.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : பொதுக் கூட்டத்திற்கான பிரேரணைகளை கல்லூரி நேரத்தில் இணைச் செயலாளரிடம் 06.05.2016 க்கு முன்னதாக சமர்ப்பிக்கலாம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை.

(4326)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.